# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 54வது கூட்டறிக்கை 2022.08.09

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 54வது அமர்வு 2022.08.09 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 20. ஜனாப்.ஏ.எச்.அன்வர் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.சஹானா | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 54வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## கௌரவ தவிசாளர் அவர்கள்:

கௌரவ உறுப்பினர்களே, இன்று நமது நாடு இருக்கும் நிலைமையில் மே மாதம் 9 ஆம் திகதியிலிருந்து அதாவது 9ஆம் திகதிக்கு ஒரு அச்சம் ஏற்படக்கூடிய நாடாக நாம் உள்ளோம். இன்று ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி சில ஆர்ப்பாட்டங்கள் செய்வதாகவும்

அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிலையில் இன்று மே 9 ஆம் திகதி ஆரம்பித்த பிரதமரின் ராஜினாமா அதன்பின் பதில் பிரதமர் நியமனம், அதன்பின் ஜனாதிபதியின் ராஜினாமா, அதன்பின் புதிய ஜனாதிபதி அவர்கள் முழு நாட்டிலும் கிடைத்த வாக்கில் ஒரு தேசியப்பட்டியல் மூலமாக பாராளுமன்றம் சென்று, இந்நாட்டின் பெரும்பான்மை வாக்குகள் எடுத்த சக்தியின் ஆதரவோடு இன்று சரித்திரம் படைத்திருக்கிறார். தனிப்பட்ட முறையில் இந்த நாட்டை ஆளுவதற்கு சகல தகுதிகளையும் கொண்டவர். அவர் 2005 ஆம் ஆண்டிலிருந்து எடுத்த முயற்சி. தன்னை விமர்சித்தவர்களினாலேயே பதவி அமர்த்தப்பட்டு ஒரு முயற்சியை எடுக்கின்றார். அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள் பிரத்தியோகமாக சபை அமர்வு முடிவதற்கு முன் வேறு விடயங்களில் கௌரவ உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

நமது பொருளாதார நிலை ஏழு மாதங்கள் கழிந்து நாம் எதிர்பார்த்த வருமானத்தில் 25 வீதமான வருமானத்தையே பெற்றிருக்கின்றோம். சராசரியாக ஒவ்வொரு மாதமும் நாம் 73 இலட்சம் வருமானமாக பெற வேண்டும். ஆனால் சராசரியாக 32 இலட்சம் வருமானமே பெற்றிருக்கின்றோம். அதற்கு மாறாக சராசரி செலவீனம் 42 இலட்சமாக இருந்தது தற்போது 62 இலட்சமாக மாறி இருக்கின்றது. அதற்கு முக்கிய காரணம் எரிபொருள்களின் விலை உயர்வு. செலவீனங்களை பார்க்கும்போது உங்களுக்கு நன்றாக விளங்கும். ஜூலை மாதம் முப்பத்தி ஒன்றாம் திகதி சபையின் நிதி நிலைமை நமது கையிருப்பில் 28 மில்லியன் ரூபா இருக்கின்றது. அதை 62 லட்சம் ரூபாவால் பிரித்தால் ஏறத்தாழ நான்கு மாதங்கள் சபையை நடத்தக் கூடிய வருமானம்தான் கையில் இருக்கின்றது. கரையோரங்களில் சில சபைகளுக்கு திண்மக்கழிவு முகாமைத்துவம் செய்வதற்கு எரிபொருள் எடுப்பதற்கு பணம் இல்லாத நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. எம்மைப் போல் அவர்களுக்கும் வருமானம் ஒரு பாரிய சவால். உங்களின் உதவியோடு நிதி முகாமைத்துவத்தினால்தான் இந்த நிலையை நாம் அடைந்திருக்கிறோம்.

நேற்றைய தேர்தல் ஆணையாளரின் கூட்டத்தின் பின் வெளிவந்த செய்திகளின் பிரகாரம் ஒன்பதாம் மாதம் தேர்தல் ஆணையாளருக்கு உள்ளூராட்சி சபைகளை பற்றி தீர்மானிக்கும் அதிகாரம் சட்டபூர்வமாக அவரிடம் செல்கின்றது. அப்போது பிரதேச சபைகள் கலைக்கப்பட்டு இந்த வருட இறுதிக்குள் தேர்தல் நடக்கக் கூடிய சாத்தியங்கள் இருக்கின்றது. அந்த நிலையில் நமது சபை கலைக்கப்படும் போது சபையை அடுத்த தேர்தல் வரை நடத்தக்கூடிய பொருளாதார நிலையை நாம் ஏற்படுத்தி விட்டு செல்வது நமது கடமையாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். அதற்கு உங்கள் முழு ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது.

இன்று சமூக வலைத்தளங்களில் மாட்டிறைச்சியின் விலையைப் பற்றி பேசப்படுகின்றது. அதற்கு நாம் தீர்மானங்கள் எடுக்கும் போது உங்களின் கருத்துகளை உள்வாங்கி ஒரு முடிவை எடுக்கலாம். ஆனால் நாம் விளங்க வேண்டியது என்னவென்றால் நான் தொடர்ந்து கூறுவதுபோல் இது தேவையையும் அந்த தேவையை பூர்த்தி செய்யும் நிலை ஆகும். நேற்று கீரி மீன் ஒரு கிலோ 1200 ரூபா. நெத்தலி மீன் ஒரு கிலோ 2000 ரூபா. முட்டையின் விலை 60 ரூபா என்ற ரீதியில் விற்கப்படுகின்றது. அதை பொருட்படுத்தாது இறைச்சி விலையில் மட்டும் எமது சமூகம் அக்கறையாக இருப்பது எனக்கு ஒரு ஆச்சரியம். நீங்கள் உங்களின் கருத்துக்களை கூறும் போது நமது பக்கத்தில் என்ன செய்யலாம் என்று கூறலாம். எல்லோருக்கும் எண்ணம் என்னவென்றால் பிரதேசசபை நினைத்தால் இதை குறைக்கலாம் என்று, ஆனால் இதைப் பற்றி நாம் பல தடவைகள் பேசி இருக்கின்றோம்.

பிரதேச சபைக்கு சட்டரீதியாக விலை நிர்ணயம் செய்ய முடியாது. பிரதேச சபையின் 126 ஆவது சரத்தின் 12-ஆவது பிரிவில் பொதுச் சந்தைகளில் விற்கப்படும் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யலாம். அதற்குரிய By Law உருவாக்கப்பட வேண்டும் என்ற சரத்து இருக்கின்றது. ஆனால் இந்தச் சட்டம் உங்களுக்கு தெரியும் 1989ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டத்தின் பின் விலை நிர்ணயம் செய்வதற்காக பிரத்தியேக ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டு அவர்கள் அந்தப் பொருட்களின் விலைகளை தீர்மானிப்பதற்கும் அதை அவதானிக்கும் கடமையும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்குமுன் நான் அறிந்த மட்டில் மாவட்ட செயலகம் இந்த பணியை செய்து கொண்டிருந்தது. ஆனால் இன்று விலை நிர்ணயம் அதுவும் குறிப்பாக இறைச்சி மீன் போன்றவைகளின் விலை நிர்ணயம் செய்வதற்கு அதில் இறைச்சியை பொருத்தமட்டில் மாட்டை வாங்கும் விலையில் தீர்மானிக்கப்படுவது தான் விற்கும் விலை. இதில் சம்மாந்துறை பிரதேச சபை என்ற ரீதியில் சிலர் முன்வைக்கும் கருத்துக்கள் சபை அதன் வாடகையை குறைக்கலாம் என்று,

சபை அதன் வாடகையை தீர்மானிப்பதில்லை. அப்படி இருந்தும் நான் உங்களுக்கு இந்த கருத்துக்களை முன்வைக்க வேண்டும் என்பதனால் சில கணக்குகளை போட்டு பார்க்கும் போது சராசரி இந்த ஊரில் இறைச்சிக்கடைகள் சாதாரண நாட்களில் 80-100 கிலோ இறைச்சி விற்கின்றார்கள். வெள்ளிக் கிழமைகளில் 300 கிலோ விற்கின்றார்கள். அப்படிப்பார்த்தால் மாதத்தில் 29 நாள் அவர்களுக்கு சராசரி 5245 ரூபா சபைக்கு செலுத்துகின்றார்கள். அதை 100 கிலோ வினால் பிரித்தால் ஒவ்வொரு கிலோவுக்கும் சபைக்கு வரியாக 52 ரூபா 45 சதம் தான் வருகின்றது. இந்த வருமானம் சம்மாந்துறை பிரதேச சபையின் வருமானத்தில் ஒரு முக்கிய பங்கு. நாம் வரி மூலமாக சேர்ப்பது ஏறத்தாழ 45 இலட்சம். ஆனால் இந்த ஏலத்தினால் நமக்கு கிடைப்பது கிட்டத்தட்ட 85 இலட்சம். அந்த வருமானத்தினால்தான் சபை நிர்வாகம் நடக்கின்றது. சம்பளத்திற்கு மட்டுமே ஏறத்தாழ 27 இலட்சம் ஒவ்வொரு மாதமும் செல்கின்றது. நிர்வாகம் செய்வது என்றால் வருமானமும் இருக்க வேண்டும். ஆனால் இந்த 52 ரூபாய் 2,000 ரூபாயில் குறைப்பதால் ஏற்படும் பாதிப்பு பெரியதாக இருக்க முடியாது. பிரதேசசபை இந்த விலை உயர்வுக்கு காரணம் அல்ல. விலை உயர்வுக்கு காரணம் மார்க்கெட்.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம். இதை அவதானித்தால் எரிபொருள் கொள்வனவு தான் நமக்கு பாரிய சுமையாக இருக்கின்றது. நாம் சேர்த்து வைத்த எரிபொருளில் ஒரு பரல் தான் இருக்கின்றது.

**தீர்மானம் - 04/54/01**

சென்ற மாதம் 2022.07.01 தொடக்கம் 2022.07.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஜனாதிபதி கட்டிடத் தொகுதியில் கட்டணங்களில் மாற்றங்கள் செய்ய வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கின்றது. குளோரின் 2021ஆம் ஆண்டு 19000.00 ரூபாவுக்கு எடுத்தது தற்போது 64850.00 ரூபா. குளோரின் கட்டாயமாக ஒவ்வொரு நாளும் பாவிக்கப்படுகின்றது. அதில் மாற்றங்கள் செய்ய வேண்டியதாக இருக்கின்றது. இப்போது நாம் நீச்சல் தடாகத்தை பாவிப்பதற்கு சிறுவர்களுக்கு 30 ரூபாவும், பாடசாலை மாணவர்களுக்கு 50 ரூபாவும், பெரியவர்களுக்கு 100.00 ரூபா என்ற ரீதியில் எடுக்கின்றோம். அதில் சிபாரிசு செய்யப்பட்டது சிறுவர்களுக்கு 50 ரூபாவும், மாணவர்களுக்கு 150 ரூபாவும், பெரியவர்களுக்கு 250 ரூபாவும் ஆகும். என்னைப் பொருத்தமட்டில் இதை சிறுவர்களுக்கு 100 ரூபாவும், முதியோர்களுக்கு 200 ரூபாவாகவும் அறவிடலாம். பயிற்சிக்கு வருபவர்களுக்கு ஒரு சலுகை வழங்கலாம். பயிற்சிக்கு வருபவர்களுக்கு பழைய கட்டணங்களை எடுக்கலாம். ஏனென்றால் இதனை பராமரிக்க வேண்டும்.

Badminton விளையாடுபவர்களின் கட்டணத்தை மின் கட்டணம் அதிகரித்தால் அதனை கூட்டலாம். நேரடியாக அதில் தாக்கம் வருவது மின்சாரத்தில் ஆகும். மின் கட்டணத்தை அதிகரித்தால் அதை அதிகரிக்கலாம். ஆனால் நீச்சல் தடாகத்திற்கு தற்போது மூன்று மடங்கு செலவு அதிகரித்துவிட்டது. இதில் இரண்டு வகை இருக்கின்றது. ஒன்று பயிற்சி பெறுபவர்கள். அவர்களுக்கு நிச்சயமாக சலுகை வழங்க வேண்டும். ஆனால் உடற்பயிற்சி செய்ய வருபவர்களுக்கு நாம் கட்டணங்களை அறவிட வேண்டும். எல்லாம் சலுகையில் செய்ய இயலாது. உண்மையாக ஜனாதிபதி கட்டடத் தொகுதியில் பராமரிப்பதற்கு பாரிய செலவு செல்கின்றது. இப்படியான ஒரு இடம் இருக்கின்றது என்று பெயர் எடுத்திருக்கின்றோம். சென்ற கிழமை தமன தவிசாளர் என்னிடம் பேசினார். அம்பாறையில் இருந்து ஒரு மாணவர் தகப்பனுடன் வந்து பயிற்சிக்கு வருகிறார். அதற்கு சலுகை வழங்குங்கள் என்று கேட்டார். அதற்கு நான் கேட்டேன் அம்பாறையில் நீச்சல் தடாகம் இல்லையா என்றால் அது மூடப்பட்டு இருக்கின்றது. எல்லா இடத்திலும் மூடப்பட்டிருக்கின்றது. நாம் மாத்திரம் தான் பராமரித்து வருகின்றோம். ஒரு மாணவி என்றபடியினால் நான் அவர்களை உத்தியோகபூர்வமாக ஒரு கடிதம்

எழுத வைத்து சலுகை வழங்கினோம். அதை நாம் பராமரித்து வருகின்றோம் அது எமக்கு ஒரு பெருமை. ஆனால் அதை சுமையாக மாற்றக்கூடாது. சுமையாக மாற்றினால் நாம் சென்ற பின்பும் அது மூடப்பட்டுத்தான் இருக்கும். இம் மாற்றத்தை செய்வதற்கு உங்களின் அதிகாரத்தை கேட்கின்றேன்.

**தீர்மானம் - 04/54/02**

ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியிலுள்ள நீச்சல் தடாகம், Badminton பாவிப்பவர்களுக்கு மணித்தியாலய அடிப்படையிலான கட்டணங்களை கீழ்வரும் வகையில் அதிகரிப்பதற்கான தீர்மானம்.

| | |
|---|---|
| நீச்சல் (சிறுவர்கள்) | - 100.00 |
| நீச்சல் (பாடசாலை மாணவர்கள்) | - 150.00 |
| நீச்சல் (பெரியவர்கள்) | - 200.00 |
| பெட்மின்டன் (சிறுவர்கள்) | - 100.00 |
| பெட்மின்டன் (பெரியவர்கள்) | - 200.00 |

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

UNDP எல்லா சபைகளிடமும் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது. UNDP நிறுவனத்தின் கீழ் செயற்படுத்தப்படும் CDLG திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் - 2022 இன் பொழிப்பினை பொது மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது. அதன் செலவுகளை UNDP மீள் அளிப்பதாக கூறியிருக்கின்றார்கள். இதனை அச்சிட்டு வழங்குவதற்கு உங்களின் அனுமதியை கேட்கின்றேன்.

**தீர்மானம் - 04/54/03**

UNDP நிறுவனத்தின் கீழ் செயற்படுத்தப்படும் CDLG திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் - 2022 இன் பொழிப்பினை பொது மக்களுக்கு அச்சிட்டு விநியோகம் செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/54/04**

49-3938 இலக்க உழவு இயந்திரம் மற்றும் துருப்பிடித்துள்ள ரெய்லர் என்பவற்றுக்கு பெயின்ற் பூசுவதற்கும், 46-4183 ரெய்லருக்கான டயர்கள் மாற்றுவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தெருலாம்புகளில் LED Round மின் விளக்குகள் கரையோரப் பகுதிகளில் பொருத்த வேண்டும். மற்ற LED களை விட இது சிறந்தது. அங்கு யானைகள் வருகின்ற பிரதேசமாக இருப்பதனால் அங்கு நாம் கூடுதலாக பொருத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கோப்ரா மின்விளக்குகள் பரந்த வெளிச்சம் கொடுப்பதில்லை. அத்துடன் அதன் பராமரிப்பு செலவு அதிகம். அதன் தரம் ஒரு வருடம் ஆயுட்காலமாக இருந்தாலும், அதன் பின்னர் ஒவ்வொரு அலகாக மாற்றும் போது பெரிய ஒரு செலவாக வருகின்றது. ஆனால் 40W மின்விளக்கு உண்மையாக சிறந்தது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கரையோரப் பகுதிகள், வட்டைகள், வளத்தாப்பிட்டி, சேகப்பற்று பகுதிகளில் கூடுதலாக அந்த மின் விளக்குகளை பொருத்த வேண்டும். ஏனென்றால் அது கூடுதலான வெளிச்சமாக இருக்கின்றது. அந்த வெளிச்சத்தில் வருகின்ற யானைகள் தெரியும். அடுத்தது நான் நேற்றும் பார்த்தேன் செந்நெல் கிராமம் - 01 இல் கோப்ரா மின்விளக்குகள் பொருத்திக் கொண்டு இருந்தார்கள். அது பிரதேச செயலகத்தால் கொடுத்தது என்று, பிரதேச செயலகம் தெரிவு செய்கின்ற இடத்தில் பொருத்துகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இருக்கின்ற இடத்தில் தான் பொருத்துவார்கள் புதிதாக ஏதும் பொருத்துவது என்றால் அதை சபை தான் தீர்மானிக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் அதிகமாக பார்த்தது என்னவென்றால் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டம் என்றதை முழுமையாக பிரதேச சபை உறுப்பினர்கள் மட்டும் தான் கையிலெடுத்து செய்தார்கள். எமது பிரதேச செயலகத்தில் மாத்திரம்தான் அவர்கள் நினைத்து மாதிரி எம்மை ஒரு பொருட்டாக ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போது கௌரவ உறுப்பினரிடம் கேட்டுப்பாருங்கள் எந்த எந்த இடத்தில் மின்விளக்குகள் பொருத்தப்படுகின்றது என்று, அவருக்கு தெரியாது. அந்த நிலைமையில்தான் நாங்கள் இருக்கின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்தத் திட்டம் ஆரம்பத்தில் பிரதேச செயலக மூலமாக செய்தது. அவர்கள் அவர்களின் EDO இன் கீழ் தான் செய்கின்றார்கள். நீங்கள் தாருங்கள் இருக்கின்ற இடத்தில் தான் மாற்றுவோம் புதிதாக இருந்தால் அதனை நாங்கள் முடிவெடுத்து தன் செய்வோம் என்று, தற்போது செய்வது இருக்கின்ற மின்விளக்குகளை கழற்றிவிட்டு செய்கின்றார்கள். புதிதாக செய்வது என்றால் நாம் முடிவு எடுத்து தான் செய்வோம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மற்ற விடயங்களில் விட்டுக் கொடுத்து இருந்தாலும் நாங்கள் ஒன்றுமே இந்த பிரதேசத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் பாரிய அபிவிருத்தி திட்டங்களில் சிறிய சிறிய வேலைகளை செய்யவில்லை. குறைந்த பட்சம் ஒவ்வொரு பிரதேசத்திலும் பொருத்தப்படுகின்றன மின்விளக்குகள் பொருத்துகின்ற நேரம் அந்தந்த உறுப்பினர்களை அழைத்து பொருத்தினால் பொதுமக்களுக்கு தங்களாலும் நடக்கின்றது என்ற ஒரு ஏற்பாடு இருந்தால் எமக்கு நல்லது. கொரோனா வந்ததற்கு பின்னர் நமக்கு எதுவுமே செய்ய இயலாமல் இருக்கின்றது. எனவே இப்படியான நிகழ்ச்சித் திட்டங்களில் நமது பிரதேச உறுப்பினர்களையும் அந்தந்த பிரதேசங்களில் உள்வாங்கினாள் அவர்களுக்கும் தெரியும், பொதுமக்களுக்கும் இது சிறப்பாக நடக்கின்றது என்று தெரியும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களது கருத்தை ஏற்றுக்கொள்கின்றேன். பிரச்சினை என்னவென்றால் இது பிரதேச செயலகத்தினால் அந்தந்த கிராம குழுக்கள் எடுத்த தீர்மானம். அதற்குள் நாம் சென்று கொச்சப்படக் கூடாது என்பதற்காகத்தான் நாம் ஒரு விதி விதித்தது என்னவென்றால் நீங்கள் இருக்கின்றதை மாற்றுங்கள் புதிதாக போடுவது என்றால் எங்களது அங்கீகாரம் வேண்டும். அந்த நேரம் கட்டாயம் அந்த பிரதேச உறுப்பினரின் பங்களிப்பு இல்லாமல் நடக்க மாட்டாது.

**தீர்மானம் - 04/54/05**

தெரு இலாம்பு மற்றும் அதற்குரிய மின் உபகரணங்கள், காரியாலய பயன்பாட்டுக்கான காகிதாதிகள் கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கடிதத்திற்கமைய திட்டமிடல் குழுவில் பங்குபற்றும் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு வழங்க வேண்டும். இதில் 2 கௌரவ உறுப்பினர்களாவது இருக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/54/06**

நகர அதிகார சபையின் DDG/P2/PC/LA இலக்க 2022.05.26 ஆந் திகதிய கடிதத்திற்கமைய திட்டமிடல் குழுவில் பங்குபற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவினை இம் மாதம் முதல் ரூபா 2500.00 ஆக வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

Certificate Course in Environment Protection and Solid Waste Management – Easter Province இதில் விருப்பமுள்ள அங்கத்தவர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கான கட்டணம் 50,000.00 ஆகும். 03 மாத Course. இதில் விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பலாம்.

சென்ற மாதம் பிரத்தியேக வகுப்புகளை பற்றி கதைத்தோம். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வலயக்கல்விப் பணிப்பாளர் என்னிடம் கூறினார் இதனை நீங்கள் என்னிடம் சொல்லி இருக்கலாம் என்றார். இது நான் கதைப்பதற்கு இல்லை. இது சபையில் வந்த ஒரு விடயம் நான் குறிப்பாக ஒன்றும் சொல்லவில்லை. பாடசாலைகள் ரியூசன் சென்டராக மாற்றப்படக் கூடாது என்ற ஒரு கருத்தை சகல அங்கத்தவர்களும் கூறியபடியினால் நாங்கள் எழுத்து மூலம் அனுப்புவதுதான் நியாயம். அது தொடர்ந்து நடக்குமானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினால் நடத்தப்படும் விவாதப் போட்டியில் சென்ற முறை எமது கௌரவ உப தவிசாளர் தலைமையில் கௌரவ உறுப்பினர் சரீபா, கௌரவ உறுப்பினர் நிலவ்பா, கௌரவ உறுப்பினர் நளீம் என்பவர்கள் பங்குபற்றினார்கள். இம்முறை முன்வருவபவர்கள் யார்? விவாதம் என்றால் எமது உப தவிசாளர் தலைமைதாங்க வேண்டும். உங்களின் தலைமையில் ஒரு குழுவை தெரிவுசெய்ய வேண்டும். விவாதத்தில் சில கருத்துகள் என்னிடம் கூறப்பட்டது என்னவென்றால் விவாதம் நடக்கும்போது குறுக்கு பேச்சுகள் தான் அதனை தடுப்பது. அனுபவம் கொஞ்சம் இருக்க வேண்டும் நமது கருத்துகளை கூறலாம் மற்றவர்கள் கதைக்கும் போது நாம் இடைஞ்சல் ஏற்படுத்தினால் அதனை செய்ய இயலாது. இதற்குரிய பொறுப்பை கௌரவ உப தவிசாளரிடம் விடுகின்றேன்.

அடுத்ததாக வேறு விடயங்களில் நமது நாட்டின் ஜனாதிபதி கௌரவ ரனில் விக்கிரமசிங்க அவர்கள் தன் தாய்மாமன் ஜே. ஆர். ஜெயவர்த்தன 73 வயதில் ஜனாதிபதியானார். அதே மாதிரி மருமகனும் ஜனாதிபதியாக மக்கள் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். ஒரு சவாலான காலத்தில் ஆறு முறைகள் பிரதம மந்திரியாக இருந்தவர். அவரின் அனுபவங்களைக் கொண்டு பாராளுமன்றத்தின் சகல உறுப்பினர்களின் பங்களிப்போடும் இந்த நாட்டை இன்று இருக்கும் நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கு அவரால் இயலுமான சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும். அம் முயற்சிகளில் இந்த சபையின் ஒத்துழைப்பு எப்போதும் மக்களுக்காக மக்கள் பக்கம் இருந்து நாம் ஆக்கபூர்வமான உதவிகளை வழங்குவதற்கு தயாராக உள்ளோம் என்ற கருத்தை அவருக்கு எழுத்து மூலம் அனுப்புவதற்கு உங்களின் கருத்துகளை உள்வாங்க விரும்புகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவர் தெரிவு செய்யப்பட்ட முறை பாராளுமன்றத்தினால் என்றாலும், இன்றய நிலையில் சகலரும் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவர் முதலாவது ஆற்றிய உரை உலகத்தையே கவர்ந்து இருக்கின்றது. அதே மாதிரி நடைமுறையில் வர வேண்டும். அதை எலிசபத் மகாராணி கூட வாழ்த்தி இருக்கின்றார். ஏனைய பெரிய தலைவர்களும் வாழ்த்தி இருக்கின்றார்கள். இந்த விடயத்தில் அவர் பேசிய முக்கியமான விடயம் வடகிழக்கு அபிவிருத்தி செய்வதும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று உரையாற்றினார். ஆனால் இந்த நேரத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் இனம் சார்ந்த அதாவது இந்த சந்தர்ப்பத்தில் நீண்டகால அனுபவம் பல முறை பேசிய விடயங்களை முன்வைத்திருக்கின்றார். இன்றைக்கு கூட கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவர் தனிக்கட்சியில் 2 உறுப்பினரோடு இருப்பவர் கூட மிக முக்கியமான விடயங்களை பேசி இருக்கின்றார். அதே போல் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற முஸ்லிம்கள் அதிகமாக வாழுகின்ற ஒரு பிரதேசம்.

எங்களது கட்சிகளோ அல்லது எமது சபையினாலோ முஸ்லிம்கள் சார்ந்த இறுதியாக நீலன்திருச்செல்வம் மற்றும் மறைந்த மா மனிதர் அஷ்ரப் அவர்கள் இருவரும் மறைந்துவிட்டார்கள் அவர்களது பிரேரணையில் முஸ்லிம்களுக்கான நியாயமான தீர்வு உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த தீர்வை நிறைவு செய்கின்ற போது இந்த ஜனாதிபதி அவர்கள் தான் பிரதமராக இருந்தார். அவரின் தலமையில் எரிக்கப்பட்டு இல்லாமல் செய்யப்பட்டது. ஆனால் அவர் பல தவறுகளில் இருந்து மீண்டு தான் செய்தவையெல்லாம் பட்டறிவு, பகிர்வுகளை அனுபவித்ததை நாடி இம் முறை அந்த நடைமுறையில் எங்களது இந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற முஸ்லிம்களுக்கான தீர்வு ஒன்று வருகின்ற நேரம் இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் தான் எடுக்கலாம். இந்த ஜனாதிபதிக்கு தற்போது 1978ம் ஆண்டய அரசியல் யாப்பை விட அதிகாரம் கூடியதாக இருக்கின்றது. இன்னும் சில விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தை ஜனாதிபதியின் அதிகாரம் கையில் இருக்கும் போது 22வது அரசியல் யாப்பு ஏனைய 19வது அரசியல் யாப்புக்கு செல்வதற்கு முதல் நாங்கள் எங்களுக்குரியதை குறிப்பாக முஸ்லிம் தலைவர்களோ, முஸ்லிம் கட்சிகளோ முன்வைக்காவிட்டாலும் இந்த சம்மாந்துறை பிரதேச சபை ஒரு நன் நோக்கான ஒரு சபை.

இலங்கையில் வாழ்கின்ற மக்கள் சம அந்தஸ்த்தோடு எந்தவொரு பிரதேசத்திலும் எப் பாகத்திலும் சகல உரிமைகளும் வாழ வேண்டிய மாதிரி ஒரு முன்மாதிரியான முன்மொழிவை கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஜனாதிபதியிடம் நாங்கள் ஒரு முன்மொழிவு பிரேரணையை உங்களுக்கும் அனுபவம் இருக்கின்றது, ஏனைய அங்கத்தவர்களுக்கும் அனுபவம் இருக்கின்றது. தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முதல் ஒரு பிரேரணையை வைத்தார்கள். நாங்களும் இந்த பிரதேச சபையால் கலைவதற்கு முதல் முஸ்லிம் சமூகத்திற்குரிய ஒரு தீர்வை நாங்களும் முன்மொழியலாம். தனி நபர்கள் கூட சில விடயங்களை அனுப்பி இருக்கின்றார்கள். எனவே நீங்களும் இந்த சந்தர்ப்பத்தை எங்களுக்கு வழங்கி இப்படியான ஒரு விவாதத்தில் கலந்து அவருக்கு கிடைத்த சந்தர்ப்பம் இறைவன் பொருட்டால் அவருக்கு கிடைத்தது.

நாங்களும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரு நல்ல முடிவை இந்த சபை எடுத்து நாங்கள் சபையால் அவருக்கும் வாழ்த்தி அவரது உரையில் எதை சொன்னாரோ அது நடைமுறைக்கு வர வேண்டும். அது உரையிலே இருந்தால் நடைமுறையாகாது. ஏனென்றால் அவர் தெரிவு செய்யப்பட்ட விதம் அவரது அணியே இல்லாத வேறு அங்கத்தவர்கள். அவர்களது கட்டுப்பாட்டுக்குள் செல்லாமல் உரையிலே நடைமுறையில் இருந்து ஜனாதிபதிக்குரிய அதிகாரத்தை பயன்படுத்தினால் எங்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தை சிறுபான்மையினரும் இந்தப் பிரதேசம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசம் அதையும் அபிவிருத்தி செய்து இந்தப் பிரச்சினைக்கும் ஒரு முடிவு காண வேண்டும் என்ற அளவில் நாங்கள் ஜனாதிபதிக்கு அனுப்புவது என்றால் சாதாரணமாக விடயங்களை உள்ளடக்காமல் சட்டரீதியாகவும் நடைமுறைக்கு யதார்த்தமாகவும் இருக்க வேண்டும் என்ற முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டும் என்று ஏனைய உறுப்பினர்களையும் கேட்டு, சந்தர்ப்பத்தை வழங்கிய உங்களுக்கும் நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி நாட்டின் அரசியல் நீரோட்டத்தில் எங்களது பிரதேச சபையும் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன் வைக்க வேண்டும் என்று

முன்வைத்த உங்களது பிரேரணைக்கு நான் விசேடமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே நேரத்தில் இன்று கௌரவ ஜனாதிபதி அவர்கள் இந்த நாட்டின் பலதரப்பட்ட மக்கள் வாழ்கின்ற நிலையில் பல வகையான பிரச்சினைகளை இந்த நாடு முகங்கொடுக்கின்ற நிலையிலும், விசேடமாக பொருளாதார சீரழிவு. அத்தோடு இலங்கை திருநாட்டின் பாதுகாப்பு சம்பந்தமான மிக முக்கியமான பிரச்சினைகளுக்கு மத்தியில் கௌரவ ஜனாதிபதி அவர்கள் இந்த நாட்டை பொறுப்பெடுத்து இருக்கின்றார்கள் மிகவும் துணிகரமான முறையில், அந்த அடிப்படையில் அவரால் முதன் முதலாக பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் போது மிகவும் நாட்டுக்கு தேவையான கருத்துக்களை முன்வைத்தார். அந்த கருத்தின் பிரகாரம் இந்த நாடு முன்னெடுக்கப்படும் என்பதில் எங்களுக்கு பூரண நம்பிக்கை இருக்கின்றது.

அத்தோடு இந்த நாட்டு மக்களுக்கும் ஒரு நம்பிக்கை உருவாகி இருக்கிறது என்பதன் வெளிப்பாடுதான் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுவது. ஏனென்றால் இந்த சர்வகட்சி அரசாங்கத்தின் மூலம் மட்டுமே அந்நிய நாட்டு செலாவணிகளை உள்வாங்க முடியும். சர்வதேசத்தின் உதவிகளை பெற முடியும். இந்த அடிப்படையில் இந்த நாட்டை முன்னெடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற படியினால்தான் இந்த சர்வகட்சி அரசாங்கம் முன்னெடுக்கப்படுகின்றது. அதுவும் மிகவும் கஷ்டங்களுக்கு மத்தியில் தீவிரவாதச் செயற்பாட்டை ஏற்படுத்தக்கூடிய தீவிரவாத புரட்சிகளுக்கு மத்தியில்தான் இவ்வாறான நிலையை கொண்டு வந்திருக்கின்றார். இதே நேரத்தில் இன்று எம்மோடு சற்று காலம் தாமதித்தாலும் எதார்த்தத்தை விளங்கி சகல கட்சிகளும் ஒன்றிணைந்து இறுதியாக JVP கட்சி கூட நேற்று பேச்சுவார்த்தை நடத்திருக்கின்றது. அந்த நிலையில் இன்று சர்வ கட்சியை ஏற்படுத்தி அந்நிய நாட்டு நன்மதிப்பைப் பெற்று உலக நிதி நிறுவனத்தின் உதவிகளைப் பெற்று நாட்டை முன்னெடுப்பதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்கள் வைத்திருக்கின்ற அந்த பிரயாணத்தில் நாங்கள் எமது சபையும் இந்த நாட்டுக்காக இந்த அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாக அவரோடு சேர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதற்கு எமது சபை ஏகமனதாக முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதே நேரத்தில் கடந்த சபையில் நாங்கள் எடுத்துக் கொண்ட தீர்மானங்கள் எல்லோரும் அறிந்த விடயம். ஆனால் அரசைப் பொருத்தமட்டில் இந்த நிலையை பொருத்தமட்டில் எந்த விடயங்களிலும் அவசரப்படக்கூடாது என்பதற்கு ஒரு படிப்பினையாகும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் அல்லது ஜனாதிபதி மாற்றத்தை நாங்கள் எல்லோரும் அவதானிக்கையில் இது எங்களுடைய சமூகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டான விடயம், அதாவது பதவி பட்டங்களை கொடுப்பவன் அல்லாஹ் என்கின்ற ஒரு வசனத்தை அல்லாஹ் நிரூபித்துக் காட்டி இருக்கின்றார். 69 இலட்சம் மக்கள் ஆணைகளைப் பெற்ற ஒரு ஜனாதிபதி பதவியை அந்த ஆசனத்தில் இருந்து அவரை இறக்க வைத்து மக்களால் புறக்கணிக்கப்பட்ட அந்தக் கட்சியில் எந்த ஆசனத்தையும் வெற்றிபெறாத ஒரு பாராளுமன்ற பிரதிநிதி தேசியப்பட்டியலில் வந்தவர். அந்த அரசாங்கத்தை அந்த பாராளுமன்றம் கூடியது ஒரு வருடத்திற்கு பிறகு ஆறு வருடம் பிரதமராக இருந்த ஒரு உறுப்பினர் அந்த பாராளுமன்றத்தில் அடி எடுத்து வைக்கும் போதும் அவமானப்பட்டு, தலைகுனிந்து வெற்கித்து சென்ற ஒரு மனிதனை தற்போது அல்லாஹ் கோபுரத்தில் அமைத்திருக்கிறான். இது எம் சமூகத்தவர் எவரையும் ஏளனமாக இடை போட்டு நலினப்படுத்தி பேசக்கூடாது என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டு. எந்த நேரத்தில் எவருக்கு ஆண்டவன் அந்த ஆட்சி அதிகாரங்களை கொடுப்பான் என்பது தெரியாத விடயம் ஒன்று.

எனவே, இப்போது வந்திருக்கின்ற கௌரவ ஜனாதிபதி அவர்கள் எல்லோருக்கும் தெரியும் எமது கௌரவ தவிசாளருக்கும் கூட தெரியும் அவர் ஆறு முறை பிரதமராக இருந்தவர். இந்த நாட்டிலே இருக்கின்ற அரசியல்வாதிகளின் அவரும் ஒரு அனுபவம் வாய்ந்தவர். இவரையும் கூட வீட்டுக்கு போகவேண்டும் Ranil Go Home என்ற ஆர்ப்பாட்டம் இன்று 09 ஆந் திகதி இந்த நாட்டிலே இடம்பெற்று கொண்டு வருகின்றது. இதை எங்களது நாட்டிலுள்ள மக்கள் பொதுவாக சிந்திக்க வேண்டிய விடயம் என்னவென்றால் எவர் ஆட்சிக்கு வந்தாலும் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஒரு முடிவை யோசிக்க வேண்டும். விலைவாசி குறைப்பதற்கான ஒரு சிந்தனையை சிந்திக்க வேண்டும் அல்லாமல் ஆர்ப்பாட்டம் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டே போவார்கள் என்றால் இதில் ஒரு பின்புலம் இருக்கின்றது. கோட்டபாய ராஜபக்ச இருந்த காலத்தில் அரசாங்கம் பின்தங்கிப் போயிருக்கின்றது, பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு இருக்கின்றது என்பதற்காக எங்களது மக்கள் புரட்சியாக எழுந்து அவரை வீட்டுக்கு அனுப்பியதற்கு பின்னர் எதிர்க்கட்சி

தலைவராக இருந்த சஜித் பிரமதாச அவர்களை கோட்டாபய ராஜபக்ச அவர்கள் பிரதமராக பதவியேறுங்கள், இந்த நாட்டை பாரம் எடுங்கள் என்று அழைத்ததற்கு அவர் போகவில்லை. பல காரணங்கள் சொல்லலாம் ஆனால் அவருக்கு அனுபவம் இல்லை. இந்த நாட்டை பாரம் எடுத்து செய்வதற்குரிய தைரியம் இல்லை. இறுதியாக எங்களுடைய ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்த நாட்டை எடுத்து பிரதமராக அந்த வரலாறு எல்லோரும் அறிந்த விடயம். நாட்டுக்கு வந்திருக்கின்ற ஜனாதிபதி அவருடைய வேலையை செய்வதற்கு காலதாமதம் கொடுக்க வேண்டும். வெறுமனே தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டம் ஆர்ப்பாட்டம் என்று செய்து கொண்டு வந்தால் யாரை தான் இந்த நாட்டுக்கு ஜனாதிபதியாக வேண்டும் என்ற நோக்கம் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இருக்கின்றது என்பதையும் வெளிக்காட்ட வேண்டும்.

கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களையும் இந்த நாட்டின் ஜனாதிபதி பதவியில் இருந்து இறக்க வேண்டுமென்றால் இந்த ஆசனத்தை எவரைக் கொண்டு அமர்த்துவது என்ற முன்மொழிவு வர வேண்டும். இது ஒரு சுயநலமான ஒரு போராட்டமாகத்தான் என்னுடைய பார்வையில் இருக்கின்றது. அவர் நாட்டில் நடக்கின்ற போராட்டங்களுக்கு முகம் கொடுப்பதா அல்லது இந்த நாட்டில் மக்களுடைய கஷ்டங்களை தீர்ப்பதற்காக விலைவாசி குறைப்பதற்கான முயற்சிகளை செய்வதா? ஏனென்று சொன்னால் ஆறு தடவைகள் இந்த நாட்டின் பிரதமராக இருந்தாலும் அவர் ஒரு தன்னிச்சையான முடிவை எடுத்து செயற்படவில்லை. ஜனாதிபதியின் கீழ் இருந்தவர். தற்போது தன்னிச்சையான முடிவை எடுத்து செயலாற்றக்கூடிய ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றவர் அவருக்கு ஒரு கொஞ்சம் கால அவகாசம் கொடுக்க வேண்டும் எங்களால் எங்களுடைய சமூகத்தினர் இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் வந்திருக்கின்ற ஜனாதிபதிக்கு கட்சி வேறுபாடுகள் தேவையில்லை. தற்போது நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் எங்களுடைய நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார வீழ்ச்சியை கட்டியெழுப்ப வேண்டும். இந்த நோக்கோடு இந்த பார்வையில் பார்வையிட்டு வந்திருக்கின்ற ஜனாதிபதிக்கு எங்களால் முடியுமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பதுதான் எனது அபிப்பிராயம் நன்றி வஸ்ஸலாம்.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று இலங்கையிலே மக்கள் புரட்சி ஒன்று கொதித்திருக்கின்றது. இலங்கை திருநாட்டிலே 1952 ஆம் ஆண்டு ஆட்சி அமைத்த அரசு 1960 இல் தோல்வி கண்டது. 1960 இல் ஆட்சிக்கு வந்தது 1965 இல் தோல்வி கண்டது. 1965 இல் ஆட்சி அமைத்த அரசு 1970 இல் தோல்வி கண்டது. 1970 இல் ஆட்சி அமைத்த அரசு 75 தோல்வி கண்டது. இவ்வாறு இலங்கையினுடைய அரசியல் ஒரு மாறி மாறி வருகின்ற போக்கும், அவர்களுடைய சில கூட்டுக் கட்சிகளும் சேர்ந்த ஒரு அமைப்பு காணப்படுகின்றது. ஜனநாயக நாட்டிலே மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வார்கள். அவர்களுடைய அபிலாசைகள் கிடைக்காத போது உடனடியாக அரசியலை மாற்றுவார்கள். இது இலங்கை ஜனநாயக பண்பு. அதனால் பண்புக்கு அமைவாக கட்சிகள் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றது. இருந்தபோதிலும் இந்த அரசியல் அமைக்கும்போது மக்களுடைய பிரச்சினைகளை மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டுமானால் அந்தக் கட்டமைப்பிற்குள் நீர்ப்பாசனம், விவசாயம், போக்குவரத்து போன்ற பல விடயங்களை திருப்திப்படுத்தி கொடுக்கும் போதுதான் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். இல்லாதபோது அவர்கள் வீதியில் இறங்குவார்கள்.

அதில் விசேஷமாக இந்த வருடம் மிகவும் மோசமான பொருளாதார வீழ்ச்சி காணப்பட்டது எரிபொருள், எரிவாயு போன்ற பல பிரச்சினைகள் உரம் இல்லாத நிலைமை இந்த காரணத்தினால் தான் உச்சகட்டத்தை அடைந்தாலும் மக்களும் ஓரளவு அரசியலில் ஈடுபாடு கூடுதலாக காணப்படுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இருந்தபோதிலும் அரசியல் நடத்துவதற்கு ஒன்று அவர்களுக்கு அனுபவம் இருக்க வேண்டும் அத்தோடு அறிவும் இருக்க வேண்டும். இவைகள் இல்லாமல் அரசியலை நடத்த முடியாது. உதாரணத்திற்காக பாகிஸ்தானை எடுத்துக்கொண்டால் ஒரு கிரிக்கெட் வீரர் அமோகமான வெற்றியை அளித்து ஆட்சியில் அமர்த்தினார்கள். அதே மக்கள் ஆட்சியில் இருந்து துரத்தினார்கள். காரணம் அவருக்கு அரசியல் போதாது. அதேபோன்றுதான் கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் எந்த அரசியல் அறிவும் இல்லாமல் வந்து ஜனாதிபதி பதவியில் அமர்ந்து அரசை நடத்த முடியாமல் நாட்டை வழிநடத்திச் செல்ல முடியாமல் இக்கட்டான நிலைமை ஏற்பட்டு, திரும்பவும் பிரதமமந்திரி மாற்றம், ஜனாதிபதி மாற்றம் போன்ற தொடர் கதை தொடர்ந்து கொண்டே போகின்றது. ஏனென்றால் சரியான தெளிவு மக்களுக்கும் இல்லை அரசியல்வாதிகளுக்கும் இல்லை.

இலங்கை பாராளுமன்றத்தில் 165 பாராளுமன்ற உறுப்பினர்கள் O/L இல் சித்தி பெறாதவர்கள். அப்படிப்பட்ட ஆட்கள் எவ்வாறு நாட்டை வழிநடத்திச் செல்வார்கள். அதேபோன்றுதான் உயர் மட்டத்தில் இருப்பவர்களும் அப்படித்தான். விவசாய அமைச்சர் சொன்னார் இரசாயன பசளை இல்லாமல் சேதனப் பசளையில் விவசாயம் செய்தால் நெல்மணிகள் பெரிதாக வரும் என்று, இறுதியில் பெரிதாகவும் இல்லை சிறிதாகவும் இல்லை, நெல்லும் விளையவில்லை. தெளிவில்லாதவர்கள் அமைச்சரவையில் புகுத்தப்படுவது போன்ற பல விடயங்கள் அதுமட்டுமல்ல புத்திஜீவிகள் வெளியேறி இருக்கின்றார்கள். பல ஆட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்கி இந்த நாட்டை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற நிலைப்பாடு வந்திருக்கின்றது. ஆகவே நாங்கள் எதிர்பார்க்கின்ற மாதிரி ஒன்றும் நடைபெறமாட்டாது. ஏனென்று சொன்னால் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதை கட்டியெழுப்புவதற்கு எல்லா பொருட்களையும் இறக்குமதி செய்து கொண்டிருக்கின்றார்கள். குண்டூசியை கூட இறக்குமதி செய்கின்றார்கள். மஞ்சளை இறக்குமதி செய்கின்றார்கள். இதில் பிரச்சினை வந்து ஓரளவு தன்னிறைவு கண்டிருக்கின்றது. நாட்டில் தன்னிறைவு காணப்பட வேண்டும். விவசாயத்தில் தன்னிறைவு காணப்பட வேண்டும்.

விவசாயம் நமது நாட்டிலே முக்கியமான பகுதி. விவசாயம் இன்று பின்தங்கியுள்ளது. விவசாய திணைக்களமும் மோசமாக உள்ளது. மக்களுக்கு விவசாயத்தை பற்றிய பூரண அறிவு இல்லை. வெளிநாடுகளிலே விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குகின்றார்கள். இவ்வாறுதான் வேளாண்மை செய்ய வேண்டும். இவ்வாறுதான் கிருமி நாசினி தெளிக்க வேண்டும். இவ்வாறுதான் பசளை போட வேண்டும் என்று, 300.00 ரூபா கொடுத்தால் ஒரு ஏக்கருக்கு 2 அந்தர் பசளை எறிவார்கள். 40000.00 ரூபாவுக்கு எடுத்தால் அரை அந்தர் எறிவார்கள். இவ்வாறு விவசாயிகள் கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். டீசல் இல்லாத பிரச்சினையை விவசாயிகள் முகங்கொடுக்கின்றார்கள். டீசல் இல்லாத பிரச்சினையில் 2 ஆபத்துக்கள் ஏற்படும். ஒன்று உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலமை. அடுத்தது அறுவடை செய்த நெல்லை அரிசியாக்கி திரும்பவும் சந்தைப்படுத்துவதில் பிரச்சினை. ஆகவே நாட்டில் இன்னும் பொருளாதார நிலமை கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றால் 10 வருடம் சென்றதன் பின்னர்தான் பழைய நிலமை வரும். அவ்வாறான ஒரு நிலமை இந்த நாட்டிலே தலை விரித்தாடிக் கொண்டிருக்கின்றது என்பதை கூறிக் கொண்டு எனது சிற்றுரையை முடிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று பெண்களுக்குத்தான் அதிகமான பிரச்சினைகள் தெரியும். ஏனென்றால் வீட்டில் பணம் இருந்தபோதும் கூட பால் இல்லை, அரிசி இல்லை, மா இல்லை, பருப்பு இல்லை இவ்வாறு பிள்ளைகள் பசியோடு கஷ்டப்பட்டு இருந்த போது அந்தத் தாய் எங்கேயாவது சென்று கைநீட்டியாவது அந்த பால் மாவை வாங்க வேண்டும். வரிசையில் நின்றாவது அந்தப் பிள்ளைகளுக்கு பசியைத் தீர்க்க வேண்டும். அவ்வாறு இருந்த காலத்தில் நாங்கள் எங்களில் ஏற்பட்ட அறிவுகள் எவ்வாறெனில் நாங்கள் சோமாலியா, ஆபிரிக்கா என்ற நிலமைக்கு இலங்கை மாறப்போகின்றது என்று எண்ணி பயந்து இரவில் தூக்கம் இல்லாமல், பகலில் எது செய்வதென்று தெரியாமல் அங்கலாடித்திரிந்த போதுதான் மக்கள் புரட்சி ஏற்பட்டு, அதற்குப் பின் மேன்மைதங்கிய ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க அவர்கள் வருகை தந்து எங்களுக்கு ஒரு தெளிவைத் தந்தார்.

இலங்கையில் பொருளாதார சரிவு மட்டுமல்லாமல் அபிவிருத்தி தடைகளும் காணப்பட்டது. அப்போது எங்களுக்கு தெரியப்பட்டது இத்தனை பேர் அமைச்சர்களாக இருந்தாலும் அவர் ஓர் அனுபவம் வாய்ந்தவராகவும், ஒரு கல்விமான் வாய்ந்தவராகவும் மற்றும் அவர் பல பாஷைகள் தெரிந்தவராகவும் காணப்பட்டார். எங்களுக்கு ஒரு மனதில் தெளிவு ஏற்பட்டது என்னவென்றால் அவர் பாசையைக் கொண்டு எந்த நாட்டுக்கு சென்றாலும் எங்களுக்கு நிதியைக் கொண்டு வருவார். மற்றும் அறிவைக்கொண்டு இந்த நாட்டை அபிவிருத்தி செய்வார். இவ்வாறான ஒருவருக்கு மீண்டும் மக்கள் புரட்சியை ஏற்படுத்தி எதற்கு எழுப்புகின்றார் என்று தெரியாது. Go Home என்ற தொனியிலே தற்போதும் இருக்கின்றார்கள்.அதை இந்த மக்கள் உணர்ந்து அவர் இந்த நாட்டை அபிவிருத்தி செய்வார் என்று உணர்ந்து அதை நிறுத்தி அவருக்கு இந்த நாட்டை அபிவிருத்தியை மேற்கொள்ளும்படி இறைவனும் அவருக்கு உதிர்ப்பை கொடுத்து இந்த நாட்டை அவர் அபிவிருத்தி செய்வார் என்ற நம்பிக்கையோடு நாங்களும் இருக்க வேண்டும் என்று கூறி அவரை இந்த சம்மாந்துறை மக்கள் சார்பாக வரவேற்று அவருக்கு வாழ்த்துக்களை கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஏனைய ஊர் மக்கள் எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள் ஆனால் சம்மாந்துறை மக்கள் ஒரு கொடி ஏந்தவும் இல்லை. ஆர்ப்பாட்டம் செய்யாத ஒரு ஊர் இது. இந்த நாட்டில் இருக்கின்ற ஜனாதிபதி இந்த ஊரை அவர் வாழ்த்த வேண்டும். ஏனென்றால் நாங்கள் ஒரு கொடி ஏந்திருக்கின்றோமா அல்லது ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றோமா? நாங்கள் எம் மதமும் சம்மதம்தான் என்ற மாதிரி செல்கின்றோம். பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். வஸ்ஸலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 74 வருட அரசியல் வரலாற்றுக் காலகட்டத்தில் இருந்து இன்றய காலகட்டத்திலே எதிர்நோக்குகின்ற பொருளாதார நெருக்கடியை மீட்டெடுக்க வேண்டும். இந்த நாட்டிலே அமைதியான ஒரு சூழல் உருவாக வேண்டும் என்று எட்டாவது ஜனாதிபதியாக இன்று சிரமத்திற்கு மத்தியில் பொறுப்பெடுத்திருக்கின்ற கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களை வாழ்த்துகின்ற விடயத்தில் நானும் வாழ்த்துகின்றேன். குறிப்பாக இந்த நாட்டிலே கடந்த ஆட்சியாளர்கள் செய்த பிரதிபலனாக இன்று மக்கள் எழுச்சிப் போராட்டம் அதனூடாக ஒரு ஜனாதிபதியை மாற்றவேண்டும் என்ற அடிப்படையிலே பல போராட்டங்கள் இந்த நாட்டிலே இடம்பெற்றது. குறிப்பாக அந்தப் போராட்டத்திற்கு மத்தியில் தன்னுடைய இல்லமும் தீக்கிரையாக்கப்பட்டது. இதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். இந்த விடயத்தில் அவர் அவருடைய இல்லம் நான் நினைக்கின்றேன் ரோயல் கல்லூரிக்கு எழுதப்பட்டதாக இருக்கின்றது. இவ்வாறான ஒரு நல்ல அரசியல்வாதியை நாங்கள் இன்று காண்கின்றோம்.

இன்று அவர் ஒரு அனுபவசாலி, பல நாடுகளோடு தொடர்பு கொண்ட ஒரு ஜனாதிபதியாக இருக்கின்றார். இன்று இந்த நாட்டிலே உணவுப்பஞ்சம் அதேபோன்று எரிபொருள், எரிவாயு விடயங்கள் இன்று இல்லாமல் ஒழிக்கப்படவேண்டும். அவர் இன்று ஜனாதிபதியாக வந்த குறுகிய காலத்திலே எரிவாயு விடயத்திலே இன்று 75 வீதமான விடயத்தை கை கொண்டிருக்கின்றார். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தான் இன்று எல்லா விடயங்களுக்குமே எரிபொருள் அத்தியாவசியமாக இருக்கின்ற கால கட்டத்தில் நாங்கள் அனுபவம் இல்லாத ஒருவரை ஜனாதிபதியாக தேர்ந்து எடுக்கும் போது இந்த நாட்டிலே எவ்வாறான விளைவுகள் ஏற்படும். ஆனால் பல்வேறு சூழ்ச்சிகள், சூட்சகங்களுக்கு மத்தியில் பாராளுமன்றத்திலே ஒரு தனி யானையாக வந்து ஒரு பிரதமராக வந்து இன்று ஜனாதிபதியாக இந்த நாட்டிலே இருக்கின்றார். குறிப்பாக அதிமேதகு என்ற வசனத்தை இல்லாமல் செய்திருக்கின்றார். அவரது பதவிப்பிரமாணத்திலே ஜனாதிபதியின் கொடியை கூட இல்லாமல் செய்து விட்டு அவர் பதவிப் பிரமாணத்தை செய்தார். அவருடைய பதவிப்பிரமாணம் பாராளுமன்றத்திலே இடம்பெற்றபோது ஒரு சாதாரணமாக நிகழ்ந்ததை கூட நாங்கள் அறிந்திருக்கின்றோம். இந்த காலகட்டத்தில் தான் இந்த நாடு செழிப்பு மிக்க நாடாக இருக்க வேண்டும் நாட்டுப்பற்று உள்ளவர்களாக மாற வேண்டும். ஆகவே நாங்கள் ஜனாதிபதிக்கு குறிப்பிட்ட காலத்தை கொடுக்க வேண்டும். அவர் இந்த நாட்டிலே மீண்டும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டியதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எமக்கு இருக்க வேண்டும். இந்த காலகட்டத்திலே சபையும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன் வஸ்ஸலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை உள்வாங்கியவனாக, எமது பிரதித் தவிசாளர் அவர்கள் கூறிய கருத்துக்கு கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்த நாட்டின் இனப்பிரச்சினையை தீர்வுக்கு அல்லது இந்த நாட்டில் 30 வருடங்களாக நடந்துவந்த போருக்கு ஒரு முடிவு காண்பதற்கான முதலடி எடுத்தவர். அவர் பிரதமராக இருந்து 2002ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தம் அதுதான் முதல் அடி. அந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச நாடுகளை ஒருங்கிணைத்து எடுத்த பெருமையும் அவரையே சாரும் இனப்பிரச்சினையில் சிறுபான்மை கட்சிகளையும் சேர்த்து பல தடவைகள் அரசியலை நடத்தி வந்தவர். இந்த சபையில் என்னை உட்பட கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள், கௌரவ உறுப்பினர் யூசுப் அவர்கள் அவரின் அரசியலில் பங்காளிகளாக இருந்திருக்கின்றோம். அவை எல்லாவற்றையும் உள்வாங்கி ஒரு ஆக்கபூர்வமான முன்மொழிவை நான் இரண்டு மூன்று நாட்களில் அதைத் தயாரித்து விட்டு பிரதி தவிசாளரோடு கலந்துரையாடி அனுப்புவதற்கு உங்களின் அனுமதியை கோருகின்றேன்.

**தீர்மானம் - 04/54/07**
இந் நாட்டின் ஜனாதிபதி கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு இந்த சபை ஊடாக வாழ்த்து தெரிவித்து எழுத்து மூலம் அனுப்புவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இறைச்சி விடயம் சம்மந்தமாக, நேற்று எடுத்த விலைகள் கல்முனையில் தீர்மானம் எடுத்தது முள்ளுடன் 1600.00, தனி இறைச்சி 1800.00 ரூபா. ஆனால் விற்கப்படுவது 2400.00 ரூபா. காரைதீவு முள்ளுடன் 1800.00, தனி இறைச்சி 2000.00 ரூபா. நிந்தவூர் முள்ளுடன் 1800.00, தனி இறைச்சி 2000.00 ரூபா. அட்டாளைச் சேனை தீர்மானம் முள்ளுடன் 1550.00, தனி இறைச்சி 1850.00 உம் விற்கப்படுவது 2200.00 ரூபா. அக்கரைப்பற்று முள்ளுடன் 1600.00 ரூபா, தனி இறைச்சி 1800.00 ரூபா இறக்காமம் முள்ளுடன் 1800.00, தனி இறைச்சி 2000.00 ரூபா. பொத்துவில் முள்ளுடன் 1600.00 தனி இறைச்சி 1700.00 ரூபா. நாவிதன் வெளி முள்ளுடன் 1800.00, தனி இறைச்சி 2000.00 ரூபா. சம்மாந்துறை முள்ளுடன் 1800.00 தனி இறைச்சி 2000.00 ரூபா. பொலன்னறுவை தனி இறைச்சி 1900.00 ஓட்டமாவடி தனி இறைச்சி 2000.00 இதுதான் இன்றய நிலை. சமூக வலைத்தளங்களில் ஒன்று, இரண்டு பேர் எழுதுவார்கள். நான் இந்த விபரங்களை சேர்த்தது ஏனென்றால் உங்களுக்கு விளங்க வேண்டும் யதார்த்தம் என்னவென்று, எழுதுபவர்கள் எழுதலாம்.

கல்முனை மாநகர சபை முதல்வர் Facebook இல் நான் இந்த சட்டத்திற்கு கீழ் நடவடிக்கை எடுக்கின்றேன் என்று, அந்தச் சட்டம் என்ன? அது என்ன சொல்வது என்றால் மாநகர சபைகள் தன் ஆதிக்கத்திற்குள் இருக்கும் பொது சந்தைகளுக்கு விலை நிர்ணயம் செய்வதற்காக By Law உருவாக்கி அதை செயற்படுத்த வேண்டும். செயற்படுத்துகின்ற நேரம் தான் இந்த சிக்கல்கள் வருவது. எப்படி விலையை தீர்மானிப்பது. இன்றைக்கு மாட்டிறைச்சியின் விலையை எப்படி தீர்மானிப்பது. நாம் புச்சர் அல்லது கடைக்காரர்களுக்கு 1650.00 ரூபாவுக்கு மாட்டை வாங்கிக் கொடுத்தால் அவர் என்ன விலைக்கு விற்க வேண்டும் என்று தீர்மானிக்க இயலாது. அவர் வாங்குகின்ற விலைக்கும் நமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. விற்பதை மட்டும் எப்படி தீர்மானிப்பது. இதில் விமர்சிப்பவர்கள் விமர்சிக்கலாம்.

இந்த விடயம் SWDC வலைத்தளத்தில் பதிவு செய்யப்பட்டது. நான் அதற்கு ஒரு பதில் அனுப்பினேன். மாநகர சபையும், பிரதேச சபையும் பாராளுமன்றத்தால் வெவ்வேறு சட்டங்களால் உருவாக்கப்பட்டது. சட்டரீதியாக முதல்வரின் தீர்மானம் நடைமுறைப்படுத்த இயலாது. அவருக்கு இறைச்சியின் விற்பனையை தடை செய்யலாம். ஆனால் அதற்கு அப்பால் எதுவும் செய்ய இயலாது. நமக்கு சட்டபூர்வமான எல்லைகளை தெரிந்து அதற்குள் செயலாற்ற தெரிய வேண்டும். உரியவர்களுடன் கதைக்காமல்தான் இந்த பதிவை செய்தது. இது தேவையை பூர்த்தி செய்யக் கூடியது. இறைச்சிக்கு தேவை குறைந்தால் விலையும் குறையலாம். மாடு விற்கின்றவருக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. அந்த நேரம் 80000.00 இற்கு கொடுத்த மாட்டை தற்போது அந்த விலைக்கு கொடுக்கமாட்டார். இதற்கு ரீஷா ஒரு பதிவை செய்தார். கட்டுப்பாட்டு விலை என்பது தோல்வியடையும் முறைமையே. ஒரு பொருளுக்கு தட்டுப்பாடு நிலவுகையில் கட்டுப்பாட்டு விலை விதிக்கும் போது அது கறுப்புச் சந்தை நிலையையே உருவாக்கும். அதாவது கட்டுப்பாட்டு விலை நட்டம் என்றபடியால் உற்பத்தியாளர் உற்பத்தியை குறைக்கவே முற்படுவார் இது மேலதிக தட்டுப்பாட்டையும் அதிகரிப்பையுமே உருவாக்கும்.

மாட்டிறைச்சியை பொருத்தவரையில் கேள்வி வழங்கலில் உள்ள விலையே விலை அதிகரிப்புக்கு காரணமாகும். உற்பத்தியாளர்கள் விநியோகஸ்த்தர்கள் சேர்ந்து செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதை தடுக்கும் முறைகளை அமுல்படுத்துவதே ஒரு அரசு பொருளாதார முன்னேற்றம் செய்யக்கூடிய புத்திசாதூரியமான செயலாகும். ஒரு பிரதேச சபைக்கு அவ்வாறான அதிகாரம் உள்ளதா? என்றால் இல்லை என்பதே பதிலாகும். இதை விட அவர் ஒரு ஹதீஸ் பதிவு செய்திருந்தார். நபி (ஸல்) அவர்களது காலத்தில் அத்தியவசிய பொருட்களின் விலை உயர்ந்த போது விலைக் கட்டுப்பாடுகள் செய்யுங்கள் என்று மக்கள் கோரிக்கை வைத்தனர். அதற்கு நபி

(ஸல்) அவர்கள் அல்லாஹ்தான் உணவளிப்பவன். தாராளமாகவும், குறைவாகவும் கொடுப்பவன். அல்லாஹ்தான் விலையை கட்டுப்படுத்துபவன். அல்லாஹ்வை நான் சந்திக்கும் போது எந்த மனிதனின் உயிருக்கோ பொருளாதாரத்துக்கோ எந்த அநீதியும் செய்யாத நிலையில் சந்திக்க விரும்புகின்றேன் எனக் கூறினார். இதில் அதிகமான அர்த்தங்கள் இருக்கின்றது.

நாம் அரசியலுக்காகவோ, விளம்பரத்திற்காகவோ எந்த முடிவும் எடுப்பதற்கு முதல் மாடு வளர்ப்பவன், இறைச்சி விற்பவன் இதை இரண்டையும் பார்க்காமல் விலையை மட்டும் பார்க்க இயலாது. எனக்கு ஒரு ஆச்சரியம் நெத்தலி மீன் 2000.00 ரூபாவுக்கு விற்கும் போது இறைச்சியை 2000.00 ரூபாவுக்கு விற்பதை தவிசாளரின் தலையில் போடுவது. சிலருக்கு தவிசாளரை தாக்க வேண்டும். ஆனால் சபை என்ற ரீதியில் இது நீதி வழங்கும் இடம். இதில் ஆக்கபூர்வமாக எல்லோரின் கருத்துகளையும் உள்வாங்கி தீர்மானிக்க வேண்டும். நான் ஓட்டமாவடிக்கு ஒரு வைபவத்திற்கு சென்று வரும் போது 1600.00 ரூபாவுக்கு இறைச்சி வாங்கி வந்தேன். அந்த நேரம் இங்கு 1800.00 ரூபா. தற்போது இங்கும் 2000.00 ரூபா, ஓட்டமாவடியிலும் 2000.00 ரூபா. ஓட்டமாவடியில் மாடு பெறக் கூடிய ஒரு இடம். சம்மாந்துறைக்கு மாடு வருவது என்றால் எவ்வளவு செலவு இருக்கின்றது என்று அதில் ஈடுபடுபவர்களுக்கு தெரியும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Facebook இல் போடுவதை நாடித்தான் மக்கள் எம்மை பிழையாக விளங்கிக் கொள்கின்றார்கள். எல்லா ஊரிலும் ஒவ்வொரு சபை இருக்கின்றது. அம்பாறை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அதற்குள் இருக்கின்ற சபை உறுப்பினர்களை சந்திக்கின்றோம். பேசுகின்றோம். ஆனால் இப்படியான முடிவுகளை எடுத்து அறிக்கைகளை சமர்ப்பிக்கின்ற நேரம் கல்முனையில் 1600.00 ரூபா என்றால் சம்மாந்துறையில் 2000.00 ரூபா என்பதுதான் இங்கு இருக்கின்ற பிரச்சினை. இந்த அறிக்கைகளை வைத்துதான் மக்கள் நமக்கு எதிராக தூண்டுவதாக இருக்கின்றது. ஏனைய சபைகளில் குறைத்து விற்கும் போது சம்மாந்துறை சபையில் மாத்திரம் ஏன் கூடுதலாக விற்கின்றார்கள். நலவு ஒன்று வரும் போது எல்லோரும் பங்கெடுத்து வாழ்த்து பெறுவர் உயர் பீடத்தில் இருப்பவர்தான். அதே போன்று பிழையான கருத்து வரும் போது தனியே பங்கெடுப்பவரும் உயர் பீடத்தில் இருப்பவர்கள்தான்.

நமது சம்மாந்துறையில் ஒரு பழமொழி இருக்கின்றது. ஓடுகின்ற மாட்டில் இறைச்சி திண்பவர்கள் தான் சம்மாந்துறையான் என்று கூறுவார்கள். கலப்படம் இல்லாத ஒன்று மாட்டிறைச்சி மட்டும்தான் புல்லு மேய்வதை நாடி. மற்றவைகளை வேறு பொருட்கள் கொடுத்து உண்பதை நாடி நோய்கள் ஏற்படுகின்றது. நாமும் அவர்களுக்கு என்ன உதவி செய்ய இயலும். மாட்டை கொண்டு வருவதற்கு பல தடங்கல்கள் இருக்கின்றது. விலை குறைவான இடத்தில் இருந்து மாட்டை கொண்டு வர இயலாத நிலை இருக்கின்றது. அவர்களின் கஸ்டத்தை கூறுகின்ற நேரம் இந்த சபையால் முடிந்தளவு பிரயானத்தில் ஏற்படுகின்ற தடங்கல்களுக்கு ஏதாவது செய்ய இயலுமா என்ற ஆலோசனையை முன்வைத்து கொண்டுவருவதற்குரிய உதவிகளை செய்ய வேண்டும். ஏழைகளுக்கு குறிப்பாக வேளாண்மை அறுவடை ஆரம்பித்தவுடன் மிகவும் பிரயோசனமாக இருப்பது இறைச்சி மாத்திரம்தான். மீன்கள் அடிக்கடி கூடும் குறையும். ஒவ்வொரு தொழிலையும் எடுத்துக் கொண்டால் நமக்கு விளங்குதில்லை நாம் படுகின்ற கஸ்டம். உலகம் எம்மை பார்த்துக் கொண்டிருக்கின்றது. உலகமயமாக இருக்கின்றதை நாடி உலகம் எம்மை பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கின்றது. கல்வியில் இருந்து சகலதும் வீழ்ச்சி அடைந்த நாடாகத்தான் நமது நாட்டை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சம்மாந்துறையில் மற்றவர்கள் கூறுகின்ற மாதிரி சாப்பிடுவதற்கு உணவு இல்லாத நிலை வருவதற்கு ஆண்டவன் விட மாட்டான். அப்படியான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே பெரும்பான்மையானவர்கள் ஒரு உயிர் சென்றால் பல உயிருக்காகத்தான் இறைச்சியை அனுமதித்து இருக்கின்றோம். கோழி அறுத்தால் 10 பேருக்கு கொடுக்கலாம் ஆனால் மாட்டை அறுத்தால் 2000 பேருக்கு உணவு கொடுக்கலாம். அந்த வகையில் எம்மால் என்ன செய்ய இயலுமோ மற்ற சபைகளோடும் நீங்கள் யதார்த்தத்தை விளங்கப்படுத்த வேண்டும். Facebook இல் அறிக்கை விடுகின்றீர்கள் அவ்வாறு விற்கப்படுகின்றதா? நான் நினனைத்தேன் 2, 3 உறுப்பினர்களை அழைத்து செயலாளரையும் அழைத்து ஒவ்வொரு கடையிலும் சென்று இறைச்சியை வாங்கி உண்மையான யதார்த்த விலையை குறித்து எடுக்க வேண்டும். இப்படி ஒரு உண்மை நிலையை தெளிவு படுத்தாவிட்டால் மக்கள் எங்களை விட உங்கள் மீதுதான் அதிதிருப்தி கூடிக் கொண்டிருக்கின்றது.

இதற்கு Facebook இலாவது பதில் அளிக்க வேண்டும். ஏதோ ஒரு முறையில் இருக்கின்ற நடைமுறை யதார்த்தத்தை விளங்கி இறைச்சி விலையில் நாம் கண்டிப்பாக கவனத்தை செலுத்தி இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாட்டிறைச்சி சம்மந்தமாக சிரமத்தை பார்க்காமல் நாமும் வலைத்தளங்களில் வருகின்ற கடைகளுக்கு சென்று இறைச்சியை வாங்கினால்தான் அந்த விலையை கண்டறியலாம். வலைத்தளங்களில் வருகின்ற விடயங்களை நம்ப முடியாது. இறைச்சி விற்பனையாளர்களிடம் சென்று பேசி இருக்கின்றேன். நமக்கு செலுத்துகின்ற காசைப் பற்றி பேசவில்லை. மாடு பற்றாக்குறை. ஹம்பாந்தோட்டையில் இருந்து வந்த மாடு தற்போது கொழும்புக்கு அப்பால் இருக்கின்றது. அம்பாரைப் பக்கம் வருகின்றது இல்லை. அதை எடுத்து வருவதற்குரிய ஏற்பாட்டை இயலுமான முயற்சிகளை செய்தால் விலைகளை குறைப்பதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் வாசித்தது Facebook இல் இருந்து எடுத்தது இல்லை. நான் எல்லா தவிசாளர்களுடனும் பேசினேன். அட்டாளைச் சேனை செயலாளரிடம் கேட்டேன். நீங்கள் எப்படி அந்த விளம்பரம் செய்தீர்கள் என்று, அதற்கு அவர் தவிசாளர் சொன்னார் அதனால் போட்டு வைத்திருக்கின்றோம். அவர்கள் Tender செய்வதில்லை. நாளாந்த கூலி எடுக்கின்றார்கள். நான் எந்தச் சட்டத்தில் கீழ் செய்தீர்கள் என்று கேட்டேன். அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரம் இருக்கின்றதா? அதை எல்லாம் பார்க்கவில்லை என்று கூறினார். மாட்டுக்காரர்கள் சென்று கதைத்திருக்கினறார்கள் இது எங்களது கட்டுப்பாட்டுக்குள் இல்லை. நாங்கள் கிராமத்திற்கு சென்றால் ஒரு கிலோ அரிசி வாங்குவதற்கு எனக்கு இவ்வளவு செலவாகின்றது எப்படி மாடு இவ்வளவுக்கு கொடுப்பது என்று கேட்கின்றார்கள். இது ஊர்ஜிதமாக ஒவ்வொரு சபையின் மூலமாக செயலாளர் எடுத்த விலைகள். என்னைப் பொருத்தவரையில் எவ்வளவு விமர்சனம் வந்தாலும் எனக்குப் பிரச்சினை இல்லை. பிரதித் தவிசாளரின் தலமையில் புச்சர் மார்களை அழைத்து Facebook இல் போடுவது என்றால் போடலாம். ஆனால் யதார்த்தம் என்னவென்றால் இது நமக்கு அப்பாற்பட்டது. ஹம்பாந்தோட்டையில் இருந்து மாடு கொண்டு வருவதற்கு பிரச்சினை போக்குவரத்து. கொழும்புக்கு செல்வது என்றால் ஒரு Van இற்கு 120000.00 ரூபா வேண்டும். ஹம்பாந்தோட்டையில் இருந்து மாடு எடுத்துவருவதற்கு இருக்கின்ற விலை.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போக்குவரத்து பிரச்சினை இல்லை. அங்கு இருந்து எடுத்து வருவதற்கு பேமிட் பிரச்சினை இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு நடக்கின்ற பிரச்சினை இறைச்சியின் விலை கூடுவதற்கு சம்மாந்துறை பிரதேச சபைதான் காரணம் என்று நினைக்கின்றார்கள். அது தெளிவுபடுத்தப்பட வேண்டும். இறைச்சியின் விலை கூடுவதற்கு பிரதேச சபை தான் காரணம். இவர்கள் தான் Tender கூடுதலாக எடுக்கின்றார்கள் என்று கூறுகின்றார்கள். Tender முறையை மக்களுக்கு தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும். விலை உயர்வுக்கும் சம்மாந்துறை பிரதேச சபைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை முதல் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் இந்த விடயத்தை எடுத்தது இப்படி கலந்துரையாடப்பட்டது என்று அந்த விளக்கங்களை கொடுப்பதற்காகத்தான் இதைப் பற்றி பேசினேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இறைச்சியின் விலை கூடுவதற்கு காரணம் மாடு கொண்டு வருவதற்கு பேமிட் இல்லை. பேமிட் வரும் என்றால் அவர்களுக்குள்ளேயே ஏதுவாது வந்து தானாக விலை குறையும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பேமிட் எடுப்பதற்கு இருக்கின்ற தடை என்ன?

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
பேமிட் தருகின்றார்கள் இல்லை. எங்களது மாடு வாகரையில் இருக்கின்றது. அதை இங்கு எடுத்துவருவதற்கு அனுமதி இல்லாமல் கஸ்டப்படுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயத்தைப் பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் கே.குலமணி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வளத்தாப்பிட்டி கிராமத்திலே சிறுவர் பூங்காவை காட்டு யானைகளால் தாக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. அதற்குரிய படங்கள் தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் அதனை சீர் செய்வதற்காகவும் அதனை பராமரிப்பதற்கும் அதைச்சுற்றி வேலிகளை முழுமையாக பூர்த்தி செய்து எக்சோரா கன்றுகளை அமைத்து அதனை அழகு படுத்துவதுடன் அதற்கு நீர் வசதியும் வேண்டும். மற்றும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டால் யானைகள் வந்து தாக்குவது குறைவாக இருக்கும். இதுதான் என்னுடைய அபிப்பிராயமாக இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வளத்தாப்பிட்டி சிறுவர் பூங்கா மற்றும் சந்தை இவை இரண்டிலும் சிறுவர் பூங்கா மூன்று தடவைகள் திருத்தப்பட்டுள்ளது. ஒரு தீர்மானம் சபையால் எடுக்கப்பட்டது அந்தந்த சனசமூக நிலையங்கள் அதனை பராமரிப்பதற்கு பாரம் எடுக்க வேண்டும் என்று, நான் ஒவ்வொரு நாளும் அதனால் செல்லும் போதும் பார்ப்பேன் அதை ஒருவரும் பாவிப்பதும் இல்லை, பராமரிப்பதும் இல்லை. அந்தந்த ஊர் மக்கள் அந்த வளங்களை பாதுகாக்க முன் வராவிட்டால் இங்கு இருந்து ஒருவரை அனுப்பி அதனை செய்ய இயலாது. சந்தை காடு பிடித்து இருக்கின்றது. அதனை சனசமூக நிலையங்கள் பாரமெடுத்து செய்வதற்கு ஒருவருமில்லை. இந்த முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. நான் செயலாளருக்கு அந்த அறிவித்தல் கொடுத்திருக்கின்றேன். வளத்தாப்பிட்டி இருக்கின்ற சனசமூகநிலையம் சிறுவர் பூங்காவையும், சந்தை வளவினையும் பராமரிப்பதற்கு உடனடியாக சபையோடு ஒப்பந்தம் செய்து அவர்கள் அதை பாரம் எடுக்க வேண்டும். நீர் இணைப்பு நிச்சயமாக எடுக்கலாம் ஆனால் அதனை பராமரிக்க வேண்டும். யானைப் பிரச்சினை அறுவடை முடியும் வரை இருக்கும். இது ஊர் மக்களை விட விவசாய மக்களுக்கு பாரிய ஒரு பிரச்சினை. உடனடியாக அந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஏனைய விடயங்களுக்கு வருவதற்கு முதல், இதற்கு முதல் பேசிய மாட்டு இறைச்சி சம்பந்தமாக, எங்களது ஊரில் எல்லோரும் விமர்சனம் செய்கின்றார்கள் என்னவென்றால் ஒரு நல்லதை எழுதுவதற்கு இங்கு எவருமில்லை. அதில் குறைகள் எதுவுமே இல்லாததை குறைகள் கண்டு அவர்கள் எழுதுகின்றார்கள். நாம் சமூக ஊடகங்களில் எழுதுவதில் யாருமே பதிலடி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது எனது கருத்து. தற்போது எமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியை மையமாகக் கொண்டு ஒவ்வொரு வியாபாரிகளும் மாபியாக்கள் செய்கின்றார்கள். ஒவ்வொரு பொருட்களையும் அங்கர் விற்கும்போது யோகட் இனை வைத்து விற்பனை செய்தார்கள் எல்லோரும் சென்று வாங்கினோம்.

அதேபோன்று பெட்ரோல் ஒரு லீட்டர் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விலை 450.00 ரூபாய் என்றால் தற்போது 3000.00 ரூபாவுக்கும் வாங்கியவர்களும் எமது ஊரில் உள்ளார்கள். அதை எழுதுவதற்கு யாருமில்லை குறை கூறுவதற்கும் யாருமில்லை. ஏனென்றால் இது இரகசியமாக நடக்கின்ற வியாபாரம் என்பதனாலும் தங்களுக்குத் தேவை என்பதனாலும் அதை அவர்கள் வாங்கிக் கொண்டு செல்கின்றார்கள். அவ்வாறான வியாபாரிகளை ஊக்கப் படுத்துகிறார்கள். இறைச்சிக் கடை என்று சொல்வது பொதுவாக ஒரு விலை பட்டியல் தயாரிக்கப்பட்டு அந்த விலை பட்டியலுக்கு ஏற்றவாறு அந்த வியாபாரங்களை அவர்கள் வெளிப்படையாக செய்வதனால் அவர்களுக்கு விமர்சனங்களை ஏற்படுத்துகின்றார். தற்போது இந்த சபையில் பேசப்பட்டவாறு அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் ஒவ்வொரு கடைகளிலும் சென்று நாம் எமது நேரத்தை

செலவிட்டு வியாபாரிகளிடம் அந்த விலையை கேட்டால் எங்களது ஊரில் தற்போது வியாபாரம் செய்கின்ற விலை நீதமான விலை என்பதுதான் எனது கருத்து. இந்தப் பதிவினை நான் வெளிப்படையாகச் சொல்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அலவக்கரை வீதியில் ஒரு பாலம் ஒன்று உடைந்து சபைக்கு சென்ற வருடம் கடிதம் அனுப்பப்பட்டு, அதற்கு நடவடிக்கையாக RDA இற்கு கடிதம் அனுப்பி இருக்கின்றோம். கிட்டத்தட்ட எட்டு ஒன்பது மாதங்கள் ஆகியும் இன்னும் அந்த வேலைகள் நடைபெறவில்லை. அந்த உடைவை சரி செய்வதற்கு மண்போட்டு நிரப்பி பாலத்தை மூடி போக்குவரத்து செய்கின்றார்கள். இதனால் மழை பெய்கின்ற நேரம் நீர் ஓட முடியாமல் அருகில் இருக்கின்ற வீடுகளுக்குள்ளும், கட்டடங்களுக்குள்ளும் செல்கின்ற நிலைமை இருக்கின்றது. மீண்டும் அதன் RDA இற்கு எழுதி அனுப்ப வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயத்தில் சென்ற கிழமை கூட அவர்களிடம் கதைத்தேன். அவர்களின் கருத்து நான் சொன்னேன் ஒரு ஸ்டீல் பிளேட் போட்டால் அது சரியாகிவிடும். அது கூட இல்லை. அவர்கள் சொன்னார்கள் நீங்கள் செய்ய இயலாதா? என்று நாங்கள் முழு கல்வெட்டை செய்வதென்றால் குறைந்தது 11 லட்சம் வேண்டும். ஏனென்றால் அது விரிவான பாதை. அதை செய்வதென்றால் சரியான முறையில் செய்ய வேண்டும். இது அவர்களின் பாதை. நான் சொன்னேன் ஒரு ஸ்டீல் பிளேடாவது தாருங்கள் என்று, அதை செய்தால் வாகனம் செல்லலாம். நீங்கள் RDA Engineer இடம் கேட்கலாம் சென்ற கிழமையும் இதைப் பற்றி பேசினேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எல்லை வீதியில் தற்போது அறுவடை காலம் நடந்து கொண்டிருக்கின்றது. உடனடியாக யானைகள் தொல்லைகள் ஏற்பட கூடிய காலம். அதற்கு மேலதிகமாக இரண்டு இடத்தில் LED மின்விளக்குகள் பொருத்த வேண்டும் என்று அந்தப் பகுதியில் வசிக்கின்ற மக்கள் முறையீடு தந்து இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதையும் ஞாபகப் படுத்துவதோடு, சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் நீரிணைப்பு பெற வேண்டும் என்று கூறியிருந்தேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு நான் மன்னிப்பு கோருகின்றேன். அந்த முடிவை எடுத்து சொல்லியும் இன்னும் அதை செயற்படுத்தவில்லை. உண்மையாக நடந்தது என்னவென்றால் 2, 3 மாதமாக ஒரு நிர்வாகமும் இல்லை. இது சபையின் முழு நிர்வாக சீர்கேடு. இந்தக் கிழமைக்குள் முடிக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றேன். அதன் பின் அதனை பராமரிப்பது பற்றி தீர்மானிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையைச் சேர்ந்த இரண்டு விளையாட்டு வீரர்கள் 17 வயதுக்குட்பட்ட தேசிய உதைப்பந்தாட்ட குழுவில் தெரிவு செய்யப்படுவதற்காக 120 பேர் கொண்ட குழுவில் சம்மாந்துறையில் இருந்து இரண்டு பேர் தெரிவு செய்யப்பட்டு நேற்று கொழும்பிலே அவர்களுக்கு 120 இல் இருந்து 60 பேர் கொண்ட குழுவில் சம்மாந்துறையில் இரண்டு பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இன்று இறுதித் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது இறுதியாக இலங்கைத் தேசிய 17 வயதுக்குட்பட்ட தேசிய உதைப்பந்தாட்ட போட்டியிலே 30 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். அதில் எங்களுடைய ஊரைச் சேர்ந்த இரண்டு விளையாட்டு வீரர்கள் M.N.M ஹஸ்னிப், I.T. இஷ்ஹான் இவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு, எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல் எங்களது ஊரைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் திறமைகளை வெளிக்காட்டுவதை நாம் உண்மையிலே இந்தளவுக்கு வந்ததற்காவது இந்த சபையால் நாங்கள் பாராட்டு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அத்துடன் கடின பந்து, கிரிக்கெட் விளையாட்டு இந்தப் பிராந்தியத்திலே நடக்கிற சுற்றுப்போட்டியிலே சம்மாந்துறை கடின பந்து விளையாட்டு வீரர்கள் அனேகமான சுற்றுப்

போட்டிகளில் முதலாம் இடத்தில் எடுத்திருக்கின்றார்கள். மற்ற ஊர்களில் இருக்கின்ற வீரர்கள் வியந்து கேட்கின்ற அளவுக்கு எங்களது விளையாட்டு வீரர்களின் திறன் வெளிப்பட்டு கொண்டிருக்கின்றது. இத்தனைக்கும் எந்தவிதமான அடிப்படை வசதிகள் கூட இல்லை. எங்களது ஆலயடி வட்டையில் இருக்கின்ற விளையாட்டு மைதானத்திற்கென்று குறித்தொதுக்கப்பட்ட இடத்திலே எங்களுடைய பிரதேச சபையினால் கனரக வாகனங்கள் பாவிக்கப்பட்டு தற்காலிகமாக விளையாடுவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்காக நன்றியைத் தெரிவிப்பதோடு, இப்போது அங்கே இன்னும் வேலைகள் தொடர்ச்சியாக செய்ய வேண்டியிருக்கின்றது. ஆகவே எங்களுடைய சபையின் Motor Grader, JCB களைப் பயன்படுத்தி அதனை செப்பனிட்டு தற்காலிகமாவது அந்த விளையாட்டை விளையாடுவதற்கு இந்த சபை ஆவண செய்யவேண்டும். எவ்வளவு பெரிய ஊரிலே அந்த விளையாட்டை விளையாடுவதற்கு உரிய உபகரணங்கள் இல்லாமல் வெளியூர்களிலிருந்து கடனுக்கு வாங்கி வந்து விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய வீரர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு இந்த சபையினால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும்.

**தீர்மானம் - 04/54/08**

எமது ஊரில் 17 வயதிற்குட்பட்ட தேசிய உதைப்பந்தாட்ட அணியில் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வீரர்களுக்கு தேவையான பாதணி உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்து வழங்குவதற்கும், ஆலையடி வட்டை பொது மைதானத்தில் உதைப்பந்தாட்டம், கிரிக்கெட் விளையாட்டுக்களை பயிலுவதற்கான அடிப்படை தேவைகளை ஏற்படுத்துவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

அடுத்ததாக விளையாட்டு மைதானத்திற்கென்று குறித்தொதுக்கப்பட்ட காணியில் எல்லைக் கற்கள் கூட கழற்றப்பட்டிருக்கின்றது. நான் அந்த இடத்திற்கு விஜயம் செய்தபோது நிலஅளவைத் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட கற்கள் கழற்றப்பட்டுள்ளது. எனவே அந்த எல்லைகளை அடையாள படுத்துவதற்காக நிழல் தரும் மரங்களையாவது வளர்க்க வேண்டும். அது எமக்கு பிரயோசனமாக இருக்கும். அதை இந்த சபை மேற்கொள்ள வேண்டும் என்று வினயமாக கேட்டுக் கொள்வதோடு,

சனசமூக நிலையங்கள் புதிதாக பதிவு செய்ய வேண்டும் என்று இரண்டு பிரதேசங்களிலே கூட்டங்களும் நடாத்தி மிக நீண்டகாலமாக எந்த நடவடிக்கையும் செய்யாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எந்தப் பிரதேசம்?

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

நைனா காடு, உமர் பள்ளிவாசல் பிரதேசம்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதனை செய்வோம்.

நான் படிப்பைவிட விளையாட்டில் மிகவும் ஆர்வம் உள்ளவன். இந்த ஊரின் துரதிஸ்டம் என்னவென்றால் இதற்காக இருக்கும் உத்தியோகத்தர்கள் எவரும் இதில் எந்தக் கவனமும் செலுத்துவது இல்லை. எல்லோரும் வேளாண்மை செய்வதிலும் அவர்கள் சென்று ஒப்பமிட்டு வருவதிலும் தான் இருக்கின்றார்கள். நாம் பெருமைப் படவேண்டும் விளையாட்டு கட்டிடத் தொகுதியை பாரம் எடுக்காவிட்டால் நீச்சல் தடாகம் வெடித்திருக்கும். இது துரதிஸ்டவசமான ஒன்று. மாகாணசபைகளுக்கு கீழ் விளையாட்டு வருகின்றது. அவர்களின் பங்களிப்பு ஒன்றுமே இல்லை.

அப்படியான ஒரு நிலையில் நாம் நமது பொறுப்பை விட இயலாது. இன்ஷா அல்லாஹ் அந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டால் அவர்களுக்குரிய சகல பொருட்களையும் சபையினால் கொள்வனவு செய்து வழங்குவதற்கு தீர்மானம் எடுக்க வேண்டும் என்று கேட்கின்றேன்.

பொது விளையாட்டு மைதானத்தில் ஒரு பிரச்சினை என்னவென்றால் உத்தியோகபூர்வமாக அந்த காணி மாற்றப்படவில்லை. கடினப் பந்து வீரர்கள் தைரியசாலிகள். அதற்கு தேவையான ஏற்பாடுகளை நாம் செய்வோம். விளையாட்டுக்கு நிச்சயமாக நாம் ஊக்குவிக்க வேண்டும். இதில் மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள். அவர்கள் எந்த பிள்ளைகளுடன் இருக்கின்றார்களா? ஒருவரும் இருப்பதில்லை. இந்த ஊரில் பிரச்சினை இதுதான். இதை ஒருவரும் காண்பதும் இல்லை அதை எழுதுவதும் இல்லை. வலைத்தளங்களில் பார்த்திருப்பீர்கள் நான் ஒரு வைபவத்தில் கூறினேன். 24000 ஏக்கர் வேளாண்மை செய்துவிட்டு 52 வீதமான குடும்பங்கள் சமுர்த்தியில் வாழ்கின்றது. இது ஒரு கேவலம். இது பிழை ஆனால் இந்த சமூகம் அதை காட்டிக் கொடுப்பதில்லை. இது மாற வேண்டும். அந்த தைரியம் மக்கள் பிரதிநிதிகளிடம் வர வேண்டும். ஒருவன் தகுதி இல்லாதவன் என்றால் அவனை இனங்கண்டு அகற்ற வேண்டும். System Change System Change என்று ஆர்ப்பாட்டம் செய்கின்றோம். ஆனால் கிராமத்தில் System மாற வேண்டும். நான் ஒவ்வொன்றையும் அவதானிப்பவன்.

உணவு வழங்கிய முறை தொடர்பாக நான் ஒரு file வைத்திருக்கின்றேன். முழு விபரத்தையும் எடுத்துப்பார்த்தால் சென்னல் கிராமம் - 01, சென்னல் கிராமம் - 02, மலையடிக்கிராமம் - 04, கல்லரிச்சல் - 03 இந்தக் குறிச்சிகளில் தேவை அதிகமாக இருக்கின்றது. ஆனால் அந்தப் பிரதேசத்து பள்ளிவாசல்கள் எவரும் ஈடுபடுவதில்லை. மஹல்லா நிர்வாகங்கள் வறுமையை போக்குவதற்கு ஈடுபடாவிட்டால் நம்பிக்கையாளர் சபையிடம் கேட்டால் அவர்கள் கூறுவார்கள் ஊரில் வறுமை இல்லை என்று. ஆனால் எத்தனை ஆயிரம் பார்சல்கள் சேர்க்கப்பட்டு அந்த மாதத்திற்குள் வழங்கப்பட்டது. ஒவ்வொரு மஹல்லாவாக நான் விபரம் வைத்திருக்கின்றேன். வலயம் வலயமாக பிரித்து வைத்திருக்கின்றேன். இவைகளில் நீங்கள் ஈடுபட வேண்டும். நீங்கள் பொது வாழ்க்கையில் முன்னுக்கு வருவதென்றால் என்னைப் பொருத்தவரையில் உங்களுக்கு அத்திவாரம் மஹல்லா நிர்வாகம். அதை மையமாக வைத்து உங்களது செயற்பாடுகளை நடத்துவீர்களானால் நிச்சயமாக முன்னுக்கு வரலாம். சமுர்த்தியை எடுத்துக்கொண்டால் அதில் சொந்தபந்தங்கள் பின்னிப்பிணைந்து இருக்கும். இதை யார் மாற்றுவது? நான் 14 வருடம் முயற்சி செய்து விட்டுவிட்டேன். ஒரு யதார்த்தவாதிக்கு அரசியலில் இடம் இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பிரதேச செயலகத்தில் கூட்டம் கூடி தீர்மானித்தது விவசாயிகளின் Token இற்கு மட்டும் டீசல் கொடுப்பதாகவும் விவசாயிகளின் Token இனை வாங்கி வேளாண்மை வெட்டுகின்ற இயந்திர உரிமையாளர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும், அதுவும் இல்லாமல் இதுவும் இல்லாமல் இடையில் வியாபாரம் செய்தால் நான் 25 ஏக்கர் வேளாண்மை செய்கின்றேன். நேற்று 03 ஏக்கர் 20000.00 ரூபா பேசி வெட்டினேன். என்னிடம் டீசல் இல்லை நான் வெட்டத்தான் வேண்டும். அந்தளவுக்கு இருக்கின்றது. கூட்டத்தில் தீர்மானித்தது போல விவசாயிகளின் கையில் அந்த டீசல் இருக்கும் என்றால் விவசாயிகள் இவ்வளவு தான் தீர்மானித்திருக்கின்றது அவ்வளவுதான் தருவோம் என்று பேசலாம். இவர்கள் பரலில் டீசல் எடுத்து வைத்து நாங்கள் கேட்பதுதான் தர வேண்டும் என்ற நிலமையில் இருக்கின்றது. பிரதேச செயலகத்தால் பார்வைக்கு ஒருவர் போடுகின்றார்கள்தானே. ஏன் அவர் நியாயமாக நடக்கவில்லை. மண் காரர்கள் மட்டும்தானா சாப்பிடுவது ஏன் நாங்கள் சாப்பிடுவதில்லையா? இன்னும் 04 வருடத்திற்கு பின்னர் எவரும் விவசாயம் செய்ய இயலாது. எனவே இந்த சபை இந்த ஊரில் என்னநடக்கின்றது என்று உடனடியாக தீர்மானம் எடுத்து அவர்களுக்கு ஒரு அறிக்கை கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்களின் கருத்தை உள்வாங்கியவனாக, இன்று பாரிய விவசாயம் செய்கை செய்து மிகவும் இன்னல்களை அனுபவித்து இறுதிக் கட்டத்தை அடைந்த எமது விவசாயிகள் அவர்களது வேளாண்மையினை சரியான காலத்தில் அறுவடை செய்ய இயலாமல் அவர்களின் முதலீட்டை காப்பாற்றுவதற்கு இயலாத ஒரு நிலைமை இன்று ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு முதலாவது

விடயம். இரண்டாவதாக வேளாண்மை அறுவடை செய்ய வேண்டிய காலமாக இருப்பதனால் காட்டு யானைகளின் தொல்லை, காலநிலை சீர்கேடு இவ்வாறான ஒரு நிலையில் விவசாயிகள் அவதியுறுகின்றதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் உண்மையாக இந்த நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எமது ஊருக்கு ஏறத்தாழ ஒரு மாத காலம் எந்தவிதமான எரிபொருளும் கிடைக்காத ஒரு துரதிஷ்டவசமான நிலைமை ஏற்பட்டது.

அதன்பின்னர் எமக்கு கிடைக்கப்பட்ட எரிபொருள்கள் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களால் எந்த ஒரு எரிபொருள் நிரப்பு நிலையங்கலாளும் நீதமான முறையில் மக்களுக்கு பங்கீடு செய்யப்படவில்லை. விவசாயிகளுக்காக எரிபொருள் வழங்க வேண்டும் என்று விவசாய அமைப்புகள், பிரதேச சபை, பிரதேச செயலகங்கள் இணைந்து எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் விவசாயிகளுக்கு அவர்களுடைய பி எல் ஆர் பத்திரத்தின் அடிப்படையில் ஒருவருக்கு 15 லீட்டர் டீசல் வழங்க வேண்டும் என்று, ஆரம்பத்திலேயே வந்த 2, 3 பவுஸர் அவ்வாறு பிரித்து கொடுக்கப்பட்டது. அதில் பாரிய சங்கடம் ஏற்பட்டது. ஒரு ஏக்கர் வேளாண்மை அறுவடை செய்வதற்கு 7 அல்லது 8 லீட்டர் டீசல் போதும். ஆனால் ஒரு ஏக்கருக்கு 15 லீட்டர் டீசல் போட்டு கொடுக்கப்பட்டது இழுவைப் பெட்டியையும் சேர்த்து. 5 ஏக்கர் வயலினுடைய நெல்லை ஒரு இழுவைப் பெட்டியில் இழுக்கலாம். என்னைப் பொறுத்தவரைக்கும் அவர் அம்பாறைக்கு சென்று நெல்லை ஏற்றிக்கொண்டு சம்மாந்துறைக்கு வருவதாக இருந்தாலும் 35 லீட்டர் டீசல் அந்த வாகனத்திற்கு தேவை இல்லை. அந்த முறைமை மாற்றப்பட வேண்டும்.

விவசாயிகளுக்கான டீசல் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். இன்று நான் நினைக்கின்றேன் 4 எரிபொருள் நிரப்பு நிலயங்களுக்கும் டீசல் வருகின்றது. ஆனால் இந்த டீசல் எந்த வகையிலும் வேறு எவருக்கும் செல்லாதவாறு விவசாயிகளின் கைகளுக்கு இந்த வேளாண்மை அறுவடை செய்வதற்காக அந்த டீசல் விநியோகம் நடைபெற வேண்டும் என்பதை இந்த சபை இன்று கட்டாயமாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு இதனை ஒரு முடிவாக எடுத்து அவர்களுக்கு அறிக்கை செய்ய வேண்டும். நீதமான முறையில் விவசாயிகளுக்கு டீசல் கிடைக்கப்பெற வேண்டும். வேளாண்மை வெட்டும் இயந்திர உரிமையாளர்களிடம் பி எல் ஆர் இனை கொடுத்ததற்கு அதுவும் நேர்த்தியாக இல்லை. இழுவைப் பெட்டியின் டீசல் இனையும் அறுவடைக்காக கொடுக்கப்பட்ட டீசல் எல்லாவற்றையும் அவர்கள் பெற்றுக் கொண்டு டீசலை வைத்துக்கொண்டு டீசல் இல்லாத விவசாயிகளிடம் பேரம் பேசுகின்ற நிலமைதான் இன்று ஏற்பட்டிருக்கின்றது.

என்னைப் பொருத்தவரைக்கும் ஒரு வேளாண்மை வெட்டுகின்ற இயந்திரம் வைத்திருக்கின்ற ஒரு உரிமையாளருக்கு ஆகக் குறைந்தது 20 அல்லது 25 நாட்கள் தான் தொழில். ஆகவே அந்த 25 நாட்களும் தொழில் செய்யக்கூடிய டீசல் ஏற்கனவே அவர்களிடம் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கின்றது. எந்தவொரு வேளாண்மை வெட்டுகின்ற உரிமையாளர்களிடம் இன்று எரிபொருள் இல்லாமல் இல்லை. இதை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி இவர்களினுடைய கூலியை கூடுதலாக பெற்றுக் கொள்வதற்கு அன்றாடம் கஸ்டப்படுகின்ற விவசாயிகளினை நெருக்கி நசுக்கி அவர்களை இன்று மிகவும் கஸ்டமான சூழ்நிலைக்கு அறுவடை இயந்திர உரிமையாளர்கள் தள்ளுகின்ற சந்தர்ப்பமும், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் தள்ளுகின்ற சந்தர்ப்பம் இன்று ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது இந்த சபை இதனை நாங்கள் செய்ய வேண்டும்.

அத்தோடு கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊரில் உள்ள கடின பந்து விளையாட்டு வீரர்களின் பயிற்சி சம்மந்தமாக ஏற்கனவே ஒரு வருடத்திற்கு முன்பு பிரேரணை கொண்டு வந்து இந்த சபையிலே நிறைவேற்றப்பட்டது. ஆனால் பொருளாதார நிலமை காரணமாக அது இடம்பெறவில்லை. வலைப்பந்து பயிற்சி உண்மையாக எங்களுடைய பகுதியிலே திறமையான வீரர்கள் இருக்கின்றார்கள். விளையாடுகின்றார்கள் ஆனால் அதனை நேர்த்தியாக செய்ய முடியாத ஒரு நிலமை இருக்கின்றது. ஆகவே எமது சபையின் ஊடாக பயிற்சி வழங்கக்கூடிய பயிற்சிக் கூடாரத்தை அமைத்து கொடுக்க வேண்டும். அதில் இருந்து ஒரு சிறிய வருமானத்தை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். நாடளாவிய ரீதியிலே நடந்து கொள்கின்ற விடயம் தான். ஒவ்வொரு வீரர்களுக்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்பட்டு அந்த நேரத்திற்கான ஒதுக்கீடு செய்து எங்களது சபைக்கான ஒரு வருமானத்தையும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் இவர்களுக்கு நேர்த்தியான முறையில் பயிற்சி வழங்க வேண்டும். அதற்கு இந்த சபை தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்பதை கேட்டு,

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது பராமரிப்பின் கீழ் இருக்கின்ற கைகாட்டி சிறுவர் பூங்கா எமது ஊரில் உள்ள சிறுவர் பூங்காக்களுக்குள் மிகவும் வன்மையான அழகான காட்சி தருகின்ற இடமாக மக்கள் அவ் இடத்திற்கு வந்து அவர்கள் பொழுதுபோக்குகளை கழித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இரவு வேளையிலே நாங்கள் நிழல் தர வேண்டும் என்று மரங்களை வளைத்து நாட்டியதனால் அம் மரங்கள் மிகவும் கூடுதலாக வளர்ந்திருக்கின்றது. அதனால் இரவு வேளைகளில் வெளிச்சம் போதிய அளவில் கிடைப்பதில்லை. வெளிச்சம் இல்லாத காரணத்தினால் பிள்ளைகள் விழுகின்ற சந்தர்ப்பம், விளையாட்டு உபகரணங்களில் இருந்து விழுகின்ற சந்தர்ப்பம் அதிகமாக இருக்கின்றது. ஆகவே அந்த சிறுவர் பூங்காவிற்கான மின்விளக்கை எவ்வாறாயினும் பொருத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் 6 மணிக்கு பிற்பாடு அதனை செயற்படுத்துவதனை தற்காலிகமாக நிறுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு முன் எங்களுடைய உறுப்பினர்கள் பேசியது போன்று 04 செட்களிலும் டீசல் வந்திருக்கின்றது என்ற விடயத்தை கவனத்தில் கொண்டு ஏன் விவசாயிகளை முன்னுரிமைப்படுத்தி அவர்களுக்கு மாத்திரம் போதியளவு டீசல்களை வழங்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை எடுத்து அனுப்ப முடியாது. ஏனென்றால் எல்லோரும் கஸ்டப்படுகின்றவர்கள். விவசாயம் தான் இந்த நாட்டின் முதுகெழும்பாக இருக்கின்ற வகையில் எங்களுடைய விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அல்லது வேளாண்மை வெட்டுகின்ற இயந்திர உரிமையாளர்கள் எமது கௌரவ உறுப்பினர் சொல்வது போன்று அதிகமானவர்கள் ஏக்கருக்கு 20000.00 ரூபா அறவீடு செய்வது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயம். இயந்திர உரிமையாளர்களை அழைத்து சந்திப்பு ஒன்றை மேற்கொண்டால் நல்லது என்று நினைக்கின்றேன். கடந்த காலங்களில் பெற்றோல் செட் உரிமையாளர்கள் நடந்து கொண்ட முறைமைகள் பிழையான முறையாக நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். இல்லீக்கல் வியாபாரம் செய்கின்றார்கள்.

2000, 2500 லீட்டர் பெற்றோல் அல்லது டீசல் இருக்கத்தக்கதாக பெற்றோல் அடித்துக்கு போகும் போது பெற்றோல் முடிந்து விட்டது என்று சொல்வதும், மக்களை திருப்பி அனுப்பியதும் ஒவ்வொரு செட் காரர்களுக்கும் ஒவ்வொரு குழு இருக்கின்றது. இல்லீக்கள் வியாபாரம் செய்கின்ற குழுக்கள். அதில் குடு, கஞ்சா விற்கின்ற கள்ள மண் ஏற்றுகின்ற அதில் அவர்களது சொந்தக் காரர்களும் இருக்கின்றார்கள். அவர்களிடம் கொடுத்து 1500.00 ரூபா ஒரு லீட்டர் 450 ரூபாவுக்கு கொடுப்பதை விட 1500 ரூபாவுக்கு கொடுத்தால் 3 மடங்கு இலாபம். அதைக் கொண்டு 3000.00 ரூபாவுக்கு மற்றவர்கள் விற்கின்றார்கள். இதற்கு பொலீஸார்களும் ஒத்துழைப்பு. இங்கு சண்டித்தனம் காட்டுபவர்கள்தான் வரிசையில் முதலிடம். கௌரவத்திற்கும் மரியாதைக்கும் பயந்தவர்கள் வரிசையில் நிற்பதில்லை. சண்டித்தனத்துடன் பொலிஸாரின் ஒத்துழைப்போடு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை பெற்றோல் அடித்துக்கு போகலாம் என்ற நிலப்பாடு.

அடுத்தது எங்களது செட் உரிமையாளர்களின் ஒத்துழைப்போடும் தான் இல்லீகல் விஷயங்கள் மேலதிகமாக நடந்திருக்கின்றது. முச்சக்கரவண்டியில் எடுத்துக்கொண்டால் மூன்று நான்கு நாட்களாக வரிசையில் நிற்கின்றான் அவருக்கு 1500 ரூபாவுக்கு பெட்ரோல் கொடுக்கப்படுகின்றது. சிலநேரம் பெட்ரோல் அடிக்கும் முறைமை வந்தும் பெற்றோல் கிடைப்பதும் இல்லை. இல்லீக்கலில் 3000.00 ரூபாவுக்கு பெட்ரோல் வாங்கி சென்னல் கிராமத்தில் இருந்து சம்மாந்துறை வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்கு 3000.00 ரூபா கேட்கின்றார்கள். கல்முனைக்கு சென்று வருவதற்கு 5000.00 ரூபா. என்ன என்று கேட்டால் நாங்கள் இல்லீக்கலில் பெட்ரோல் வாங்குவது 3000.00 ரூபா எப்படி நாங்கள் ஹயர் ஓடுவது. ஏன் பெட்ரோல் செட்டில் செனறு அடிக்கவில்லை என்று கேட்டால் செட்டில் 03 நாள் நிற்க வேண்டும். அதுவும் பெற்றோல் கிடைக்குமா என்று ஊர்ஜிதம் இல்லை. 1500 ரூபாய்க்கு பெட்ரோல் தருகின்றார்கள்.

QR கோட் மூலம் மோட்டார் சைக்கிளுக்கு நான்கு லீட்டரும் ஆட்டோவுக்கு 5 லீட்டரும் அறிமுகப்படுத்தி இருக்கின்றார்கள். கிழமைக்கு ஆட்டோ காரர்களுக்கு குறைந்தது 15 லீட்டராவது கொடுத்தால்தான் மக்களின் சுமைகளை குறைக்கலாம். அவர்களையும் அழைத்து பேசவேண்டும் நீங்கள் மக்களை அதிகமாக கேட்டு கஷ்டப்படுத்த கூடாது என்கின்ற விடயம். அதே மாதிரி கௌரவ உறுப்பினர்கள் எங்களிடம் தான் அதிகமான சைக்கிள்கள் இருக்கின்றது எங்களுக்கு 4 லீட்டர் பெட்ரோல் போதாது. என்னை உதாரணமாக எடுத்துக்கொண்டால் மட்டக்களப்பு இறைவரித் திணைக்களத்திற்கு சென்று வருவதற்கு பெட்ரோல் இல்லை 5 லீட்டர் பெட்ரோல் தேவை தற்போது

வருகின்ற பெட்ரோல் திக்னஸ் குறைந்தது கிட்டத்தட்ட இருபத்தி ஏழு கிலோமீட்டர் வேலை செய்யும் பல்சர் பைக்கில். சென்றுவர 130 கிலோமீட்டர் எனது வட்டாரம் 4 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய வட்டாரம். எனது வட்டாரத்தில் வருகின்ற பிரச்சினைகளை பார்க்க செல்வதற்கு பெட்ரோல் தேவை. இதேபோல்தான் எல்லா உறுப்பினர்களுக்கும் உறுப்பினர்களின் கொடுப்பனவும் கிழமைக்கு 10 லீட்டர் கிடைத்தால் தான் எங்களுக்கும் மக்கள் மத்தியில் உலாவித் திரிவதற்குரிய வாய்ப்பு கிடைக்கும். பெட்ரோல் செட் உரிமையாளர்களை அழைத்து பிழைகள் செய்து இருக்கின்றீர்கள் பிழைகளை விட்டுவிட்டு இனிமேலாவது ஒழுங்காக விநியோகம் செய்ய வேண்டும் என்று கூற வேண்டும்.

முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மக்களிடம் அறவிடுகின்ற கட்டணத்தை குறைப்பதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும். அவர்களுக்கு போதியளவு பெற்றோல் கொடுப்பதற்குரிய முயற்சியையும் செய்ய வேண்டும். தற்போது விவசாயிகளை முன்னுரிமைப்படுத்தி எந்த வாகனங்களுக்கும் கொடுக்காமல் வேளாண்மை வெட்டுவதற்கு டீசலை இயந்திரங்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்த சபையால் தீர்மானம் எடுத்து நடவடிக்கை உடனடியாக செய்ய வேண்டும். 2 கிழமையால் வேளாண்மை அறுவடை முடிந்துவிடும். இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து உடனடியாக கூட்டங்களை கூட்டி முடிவுகளை எடுக்க வேண்டும். எமது ஊர் பாராளுமன்ற உறுப்பினர் இல்லாத ஊர். இந்த ஊரின் நல்லது கெட்டது இந்த ஊரை கட்டிக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு கௌரவ தவிசாளருக்கும் பிரதேச செயலாளருக்கும் இருக்கின்றது. பிரதேச செயலாளர் அவரது பாட்டில் வேலைகளை செய்து கொண்டிருக்கின்றார். கௌரவ தவிசாளர் உங்களது பாட்டில் வேலைகளை செய்து கொண்டிருக்கின்றீர்கள். அவரையும் அழைத்து இந்த ஊரில் இப்படித்தான் நடக்கின்றது என்று ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்தி ஒரு தீர்மானத்தை எடுத்து செயற்பட வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மேலும் ஒரு விடயத்தை ஞாபகப்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றேன் அத்தியாவசிய தேவைக்காக கொழும்பு செல்லுகின்ற பஸ் இற்கும் இந்த டீசல் வழங்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால் ஒரு பஸ் 54 பேரின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு வாகனம். அதைக் கொஞ்சம் கருத்தில் எடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எச்.அன்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 4 செட்களுக்கும் 6600 லீட்டர், 6600 லீட்டர் டீசல் வருகின்றது. இதில் 6600 லீட்டர் அத்தியவசிய சேவைக்கும், ஏனைய 6600 லீட்டர் டீசல் மற்ற தேவைகளுக்கும் வழங்க வேண்டும். இரவு நேரங்களில் விற்பவர்களை நாங்கள் பிடித்து தருகின்றோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
எமது சம்மாந்துறை ஊரினுடைய எல்லைக் கிராமமாக இருக்கின்ற வளத்தாப்பிட்டி கறங்கா வட்டை 2014 இல் இருந்து விவசாயிகள் பல்வேறு அச்சுறுத்தல்களை மேற்கொண்டு பல ஏக்கர் காணிகள் சூறையாடப்பட்டுள்ளது. அந்தக் காலகட்டத்திலே அந்த மக்களினுடைய துயரை அறிந்து சம்மாந்துறையினுடைய முதல் மகன் என்ற அடிப்படையிலும் இங்கே இருக்கின்ற விவசாயக் குழுக்களின் தலைவன் என்ற வகையிலும் நீங்கள் பல்வேறு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு பல அதிகாரிகளை சந்தித்தீர்கள். ஆனால் அதற்கு மேலதிகமாக 2021 ஆம் ஆண்டு பெரும்போகத்திற்கான வேளாண்மையை செய்வதற்காக எங்களுடைய விவசாயிகள் சென்ற போது அவர்களை அச்சுறுத்தி பல ஏக்கர் காணிகளை சூரையாடுவதற்காக சிலர் கைக்கொண்டிருந்தனர். அந்தக் காலகட்டத்திலே நீங்களும் அம்பாரை மாவட்டத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ் விடயத்தை பேசியிருந்தீர்கள். அதற்கு பிற்பாடு இதற்கு தீர்வு பேச்சுவார்த்தை இல்லை என்ற அடிப்படையிலே எங்களினுடைய அம்பாரை மாவட்டத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ முஷர்ரப் அவர்கள் அவரது கஸ்டத்திற்கு மத்தியில் அவருடைய பொருளாதாரங்களை செலவிட்டு இன்று கொழும்பிலும், அம்பாரையிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு முதல் வழக்காக எங்களுக்கு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்வுகள் எட்டப்படாத சூழ்நிலையிலும் நீதிமன்றத்தை நாடியாவது ஏழைத் தாயினுடைய காணி மீட்டெடுக்கப்பட்டிருக்கின்றது. அதை ஏன் இவ்விடத்தில் கூறுகின்றேன்

என்றால் சம்மாந்துறையினுடைய எல்லையில் இருக்கின்ற ஒரு இன்ச் காணியும் பரிபோகக்கூடாது. அந்த விவசாயிகள் பட்ட துன்பங்களை நான் நன்கு அறிந்தவன். அதே போல் நீங்களும் எனக்கு முன்னர் ஏற்பட்ட காலங்களில் இருந்தே விவசாயிகளினுடைய துயரில் பங்கெடுத்திருக்கின்றீர்கள். அந்த அடிப்படையிலே மீண்டும் எங்களுடைய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரப் அவர்களுக்கு இந்த இடத்திலே சம்மாந்துறை மண்ணினுடைய மக்களுடைய பிரதிநிதி என்ற அடிப்படையிலே அவருக்கு வாழ்த்து தெரிவிக்கின்றேன். நன்றி வஸ்ஸலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, டீசல் பிரச்சினை நான் நேற்று மல்வத்தை வளத்தாப்பிட்டி ஊடாக சம்மாந்துறைக்கு வருகின்ற போது பல வயல்கள் அறுவடை செய்கின்ற காலத்தையும் தாண்டி பாரிய நஸ்டத்தை விவசாயிகள் எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது. ஆகவே உடனடியாக இந்த ஊரின் உயர்ந்த சபை என்ற ரீதியில் 04 செட் உரிமையாளர்களுடன் பிரதேச செயலாளர், OIC, Army Officer இவர்களுடன் இந்த சபையில் ஒரு குழுவை தயாரித்து இன்றைக்கு அவர்களை அவசரமாக சந்தித்தால் என்ன? இது ஓர் தார்மீக பொறுப்பாக இருக்கின்றது. எல்லோரும் வாழத்தான் வேண்டும். கொழும்புக்கு பஸ் செல்லத்தான் வேண்டும். மண் தொழில் செய்கின்றவன் அவர்களும் வாழத்தான் வேண்டும். முச்சக்கர வண்டி உரிமையாளர்களும் வாழத்தான் வேண்டும். ஆனால் இந்த விடயத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் சொன்னமாதிரி 02 கிழமையால் வேளான்மை அறுவடை காலம் முடிந்துவிடும் ஆகவே அவசரமான ஒரு கூட்டத்தை இங்கு இருக்கின்ற கௌரவ உறுப்பினர்களை குறிப்பிட்டளவு எடுத்து செட் உரிமையாளர்களையும், பொலீஸ் பொறுப்பதிகாரி தேவைப்பட்டால் ASP அல்லது DIG இந்த பிராந்தியத்திற்கு பொறுப்பான SSP இந்தப் பிராந்தியத்திற்கு பொறுப்பான இராணுவ கட்டளை அதிகாரியையும் அழைத்து முன்மாதிரியாக செய்தால் என்ன? இது ஓர் அவசர தேவையாக இருக்கின்றது.

அத்தோடு வரும் போது கிடைத்த முறைப்பாடு ஒன்று சம்மாந்துறையிலே இருக்கின்ற மர ஆலை உரிமையாளர்கள் மூவர் 2022.04.18 ஆந் திகதி உங்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பி இருக்கின்றார்கள். பல்வேறு காரணங்களால் அவர்களது தொழிலை செய்ய முடியவில்லை என்று ஆதன வரியை குறைத்துத் தருமாறு கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதனை கவனத்தில் எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, விவசாய அமைப்புகளின் தலைவன் என்ற ரீதியில் 2 மாதங்களுக்கு முன் இருந்து தீர்மானங்கள் எடுத்து விவசாய நடவடிக்கைகளுக்கு முழுப் பொறுப்பும் அரசாங்க அதிபரிடம் வழங்கப்பட்டிருந்தது. அவரின் அனுசரணையோடு பிரதேச செயலாளர், சபையின் தலைவர் என்ற ரீதியில் நாங்கள் ஆக்கபூர்வமான திட்டத்தை தயாரித்து அரசாங்கத்திற்கு வழங்கி இருந்தோம். துரதிஸ்டவசமாக நாட்டின் பொருளாதார சிக்கலினால் ஏறத்தாழ 2, 3 கிழமைகள் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு டீசல் இல்லாத படியினால் இந்த தட்டுப்பாடு ஏற்பட்டதற்கு ஒரு காரணம். மற்ற காரணம் இந்தக் கூட்டத்தில் எடுத்த தீர்மானம் என்னவென்றால் இயந்திரச் சொந்தக்காரர்கள் விலை பேசுவார்கள் என்பதற்காக விவசாயிகளுக்கு அவர்களின் PLR இன் படி கோட்டாவை வழங்குவதும் அந்த கடிதத்தை இயந்திர சொந்தக் காரர்களிடம் கொடுத்து அதை அவர்கள் மொத்தமாக எடுத்து செயற்படுத்துவதற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு மேலாக அறுவடை செய்யும் முறையில் எந்த எந்த வட்டைகள் முதல் அறுவடை செய்ய வேண்டுமோ அந்தந்த வட்டைகளுக்கு தொடராக கடிதங்கள் விநியோகிக்கப்பட வேண்டும் என்ற ஒரு முடிவு இருந்தது.

ஆனால் துரதிஸ்டவசமாக நமது வட்டானைகள் எல்லோரும் சேர்ந்து எல்லா கண்டத்தின் கடிதங்களையும் எடுத்து பகிர்ந்தவுடன் என்ன நடந்தது என்றால் எல்லா வயல்களும் அறுவடை செய்யும் காலத்தை தாண்டியுள்ளது. நமக்குள் ஒரு கட்டுப்பாடும் இல்லை. நமக்கு 10 லீட்டர் படி நமக்கு தேவை 2 ½ இலட்சம் லீட்டர். இன்று வரைக்கும் 97850 லீட்டர் வந்துவிட்டது. ஆனால் முறையாக கொடுக்கப்படவில்லை. பிந்தி அறுவடை செய்பவர்கள் எடுத்து வைத்திருக்கின்றார்கள். ஆனால் முந்தி வெட்டுபவர்களுக்கு டீசல் இல்லை.

அடுத்தது எரிபொருள் வியாபாரம் தனியார் வியாபாரம். அவர்கள் முதல் போட்டு எடுத்து வருகின்றார்கள். சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அவர்களுக்கு பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தால்

வழிகாட்டப்படுகின்றது. நீங்கள் கூறுகின்றீர்கள் இன்றைக்கு எல்லா செட்களுக்கும் 13200 லீற்றர் வருகின்றது என்று, நேற்றுக் கூட விவசாய அமைச்சர் மூலமாகத்தான் ஜனாதிபதியிடம் கதைத்து விட்டு எல்லா விபரங்களையும் கொடுத்து நேற்றுக் கூட விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அமரவீர கெபினட் இற்கு செல்வதற்கு முதல் நான் கதைத்தேன். உடனே அரசாங்க அதிபர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். நான் சொன்னேன் ஆகக்குறைந்தது இன்னும் ஒரு லட்சம் லீற்றர் டீசல் இந்த கிழமைக்குள் வர வேண்டும்.

ஓரளவு நமது செட் காரர்கள் எல்லோரும் முன்னுரிமை கொடுக்கின்றார்கள். அதற்குள் அசம்பாவிதங்கள் நடக்கின்றது. அதற்கும் நாம் தான் பொறுப்பு. வாய்க்கால் எல்லாம் தோண்டப்படுகின்றது. அதற்கு பொறுப்பு யார்? நீர்ப்பாசன திணைக்களம் ஆனால் நீர்ப்பாசன திணைக்களம் அனுசரணை மண் தோன்றுபவர்களுக்கு. டீசல் எடுத்துக் கொடுப்பதிலும் இருக்கின்றது. இன்றைக்கு எஸ்.எம்.பாறூக் செட்டுக்கும், கபூர் செட்டுக்கும் 13200 லீட்டர், 13200 லீட்டர் வர வேண்டும். நான் அமைச்சரிடம் சொன்னேன் நாங்கள் அவர்களுக்கு கொடுத்த கணக்கு 375000 லீட்டர். இந்தக் கிழமைக்குள் ஒரு இலட்சம் லீட்டர் டீசல் வர வேண்டும் அந்த முயற்சியில் இருக்கின்றேன். நீங்கள் கூறியமாதிரி செட் உரிமையாளர்கள், வட்டானைகள், பொலீஸ், இராணுவம் எல்லோரையும் அழைத்துதான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. பொலீஸ் உத்தியோகத்தர்கள் அவர்களது குடும்பத்தார்களுடன் இணைந்து வியாபாரம் செய்கின்றார்கள். இவற்றையெல்லாம் கண்காணிக்கின்ற பொறுப்பு நம்மிடம் இல்லை. உங்களின் தவிசாளர் என்ற ரீதியிலும் நான் ஒவ்வொரு நாளும் அந்த விடயத்தில் கவனமாக இருக்கின்றேன். நானும் ஒரு விவசாயி. நானும் இன்னும் ஒரு வயலும் வெட்டத் தொடங்கவில்லை. அனைத்து செட் உரிமையாளர்களுக்கும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அறிவித்தல் கொடுத்திருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மீண்டும் ஒரு தடவை அவர்களை அழைத்து பேசுவதால் நடக்க இருக்கின்ற ஊழல்களை தடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் அவர்களிடம் கதைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் மாத்திரம் பேசுவதை விட சில அங்கத்தவர்களை அழைத்து பேசினால் நல்லது என்று நினைக்கின்றேன். 2 கிழமைக்குள் முடிகின்ற விடயம். இதை அவசரமாக அழைத்து ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சட்டபூர்வமாக அதிகாரம் இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தனிப்பட்ட வியாபாரமாக இருந்தாலும் சமூகம் சார்ந்த பிரச்சினை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் அவர்களுக்கு சட்டம் இயற்ற இயலாது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சட்டம் இயற்ற இயலாது. இது ஓர் தார்மீக பொறுப்பு. சமுதாயம் சம்மந்தப்பட்ட பிரச்சினை. நீங்கள் 4 பேரும் தான் இதற்கு முகங்கொடுக்க வேண்டியவர்கள். இந்த சபைக்கும் ஒரு பொறுப்பு இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அனைத்து உறுப்பினர்களோடு ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்வோம் என்று கூறி இத்துடன் சபை அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

கௌரவ தவிசாளர்,
கௌரவ உப தவிசாளர் / கௌரவ உறுப்பினர்
சம்மாந்துறை பிரதேச சபை.

**கூட்டறிக்கை அனுப்புதல்**

கடந்த 2022.08.09 ஆந் திகதி இடம் பெற்ற எமது 04வது சபையின் 54வது அமர்வின் கூட்டறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருக்குமாயின் எதிர்வரும் 2022.09.07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளரின் கட்டளைக்கமைய கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை